# போராட்டம்

2014 சூன் | இதழ் 13 | இப்பத்திரிகை மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு | 20.00 ரூபா

# ஜனநாயகத்திற்கான போராட்டத்தை கொள்ளையடிக்கும் முயற்சி!

**உண்மையான ஜனநாயகத்திற்காக மக்கள் நடத்தும் போராட்டத்தை முதலாளித்துவ குழுக்களின் அதிகார பரிமாற்றத்திற்காக கொள்ளையடிக்கும் முயற்சியொன்று நடக்கிறது. மக்களின் பரவலான ஜனநாயக உரிமைகள் அனைத்தையும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ரத்துச் செய்யும் கோஷத்திற்குள் மட்டுப்படுத்துவதும் ஜனநாயகத்தை அதன் விரிவான அர்த்தத்திலிருந்து தவிர்த்து தாராளவாத எல்லைக்குள் சுருக்குவதும் இதன் முதல் நடவடிக்கையாக இருக்கிறது. அதோடு் இன்னொரு முதலாளித்துவ தலைவருக்கு முடிசூடுவதற்கும் பயன்படுத்தப்படவிருக்கிறது.**

இந்நிலைமையை மாற்றுவதற்காக ஒடுக்கப்பட்ட மக்களுக்கிடையில் ஒற்றுமையையும், போர்க்குணத்தையும் உயர்த்துவதோடு, ஜனநாயகத்திற்கான போராட்டத்தை ஒடுக்கப்பட்ட மக்கள் தமது கைகளில் எடுக்க வேண்டும். அதற்காக கருத்தியல் போராட்டத்தை தீவிரப்படுத்தவும், மக்களின் உண்மையான உரிமைகளுக்கான போராட்டத்தை இடதுசாரிய தலைமைத்துவத்தின் கீழ் கொண்டுவதற்கான திட்டம் தேவைப்படுவதோடு, முன்னிலை சோஷலிஸக் கட்சி அது சம்பந்தமான பேச்சுக்களை ஆரம்பித்திருக்கின்றது. அதன்படி, பாட்டாளி வர்க்க ஜனநாயகம் சம்பந்தமான கருத்தாடலை தமது உரிமைகளுக்காகப் போராடும் சக்திகளின் கொண்டு செல்லவும் கட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இக்கருத்தை சமூகமயப்படுத்தும் நோக்கில் மக்களிடம் எடுத்துச் செல்லும் நடவடிக்கை இம்மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

## பயஙுகரவாதிகள் மிரட்டெ வேளியிட்ட மழமத் துண்டுப்பிரசுரஙுகள்

ஒட்டுமொத்த சமூகத்தையும் மிரட்டி அச்சத்தை விதைப்பதன் மூலம், சமூகப் பிரச்சனைகளைத் தீர்க்கலாம் என்பது மகிந்தா தலைமையிலான ஆளும் வர்க்கங்களின் கொள்கையாகும். யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களையும் மாணவர்களையும் மிரட்டி வெளியான துண்டுப்பிரசுரங்கள் இதற்கான எடுத்துக்காட்டு.

அரசு தொடர்ச்சியாக முன்னெடுக்கும் ஜனநாயக விரோத கொள்கைகளுக்கும், ஆட்சிக்கும் இசைந்ததாகவே, இந்த துண்டுப்பிரசுரச் செய்திகள் அமைந்திருக்கின்றது. அரச பயங்கரவாதத்துக்கு நிகரான, இந்த சட்டவிரோதமான செயலை கண்டுபிடிக்க அரசு தயாராக இல்லை. சட்டவிரோதமான நிழல் பயங்கரவாத ஆட்சி முறையே, வடக்கு-கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்றது.

அண்மையில் புலிகளுக்கு ஆதரவாக தோன்றிய துண்டுப்பிரசுரங்களை அடிப்படையாகக் கொண்டு, இதே அரசு மீண்டும் ”புலி” வேட்டை நடத்தி முடித்தது. ஆனால் யாழ் பல்கலைக்கழக துண்டுப்பிரசுரங்களை இட்டு, அரசு வழமை போல் அலட்டிக் கொள்ளவில்லை. மாறாக எழுகின்ற உணர்வுகளையும் உணர்ச்சிகளையும், இந்த சட்டவிரோத செயல் மூலம் அடக்கியாள முனைகின்றது. இதற்கு அமைவாக, சட்டவிரோதமாக தொடர்ந்து நடந்தேறுகின்றது.



## அரசின் இனவாதத்தை முன்னெடுக்க பொலிசாருக்கு விசேட பயிற்சி

”இன சமூகங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை தடுக்க காவல்துறையினருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாக” ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். மத விடையங்களை கையாள விசேட பொலிஸ் பிரிவுகள், பயிற்சிகள் என்பன, இனமத ஆட்சியாக குறுகி வருவதையே காட்டுகின்றது.

சுரண்டும் வர்க்கத்தின் சட்டதிட்டங்களை பாதுகாக்கும் பொலிசாருக்கு, மேலதிகமாக பெரும்பான்மை இன மதம் சார்ந்து எப்படி செயற்படவேண்டும் என்பதை கற்றுக்கொடுக்க உள்ளனராம். அரசின் இன மத தன்மையை பேணுவதற்கான சட்டவிரோத முறையை கையாள்வது எப்படி என்பதற்கான விசேட பயிற்சி தான் இது. அரசு முன்னெடுக்கும் இன மத கொள்கையை கூர்மையாக்கி, மக்கள் மயப்படுத்தும் சதித்திட்டமாகும்.

# பல்கலைகழக மாணவர்கள் மீதான பொலிஸ் அடக்கு முறைக்கு எதிராக இடதுசாரி தலைவர்கள் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்துகளின் சுருக்கம் !

**இணைந்த சுகாதார பட்டப்படிப்பிற்கான நான்காண்டு கால வகுப்புகளை மூன்றாண்டு காலமாக குறைத்தமைக்கு எதிராகவும் பல்கலைகழக மாணவர்கள் எதிர்கொள்ளும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு கோரியும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தொடர்ச்சியாக சத்தியாகிரக போராட்டத்தில் டுபட்டு வருகின்றனர்.**

**சுத்தியாகிரக போராட்டத்திற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்தில் டுபட்ட மாணவர்கள் கலைந்து சென்ற போது சிவில் உடை தரித்த பொலிசார் அடாவடித்தன முறையில் கைது செய்ததுடன் கண்மூடித்தனமாக தாக்கி விளக்கமறியலில் வைத்துள்ளனர். அரசாங்கம் பல்கலைக்கழக மாணவர்கள் மீதாக கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்குமுறைக்கு எதிராகவும் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டித்தும் இடதுசாரி கட்சிகள் 17ஆம் திகதி 'நிப்போன் ேராட்டலில்' ஊடகவியலாளார் சந்திப்பொன்றை நடாத்தினார். அதில் கலந்து கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் வெளியிட்ட கருத்துக்களின் சாரம்சம்.**

## முன்னிலை சோஷலிச கட்சியின் பிரதிநிதி

### -தோழர் துமிந்த நாகமுவ



இணைந்த சுகாதார பட்டப்படிப்பிற்கான கால எல்லையை மீண்டும் நன்காண்டு காலமாக உயர்த்த கோரியும் கல்வியை வியாபார பொருளாக்கும் நிகழ்ச்சி நிரலை கைவிட கோரியும் மாணவர்கள் மீதான அடக்குமுறைகளை நிறுத்தக் கோரியும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அமைதிவழியில் சத்தியாகிரக போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இந்த சந்தர்ப்பத்தில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது எமது பொறுப்பாகும்.

கடந்தகால அரசாங்கங்கள் கல்வி தொடர்பாக பின்பற்றிய கொள்கைகளின் பிரதிபலனே இன்று எழுச்சி பெற்றிருக்கும் போராட்டமாகும். ஒருபுறம் கல்விக்கு ஒதுக்கப்படும் நிதி குறைப்பு, மறுபுறம் கல்வி வளர்ச்சி தொடர்பில் திட்டம் எதுவும் இல்லாமை. தற்பேதைய அரசின் "மஹிந்த சிந்தனைக்கும்" முன்னைய ஐ.தே.கட்சி அரசின் "இலங்கையை மீளக்கைப்பற்றல்" நிகழ்சி நிரலுக்கும் இடையில் எதுவித வேறுபாடுகளும் இல்லை. இவற்றின் பிரதிபலிப்புகள்தான் பல்கலைக்கழக வகுப்புகள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. அரசாங்கம் இப்பிரச்சினையை தொழிற்சங்கங்கள் மீதாக பழிசுமத்தி தப்பித்து கொள்ள முயற்சிக்கிறது. தற்போது மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது. நேற்று மீண்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் ஆர்ப்பாட்டம் முடிவடைந்த பின்னர் கலைந்து சென்றபோது அவர்களை சிவில் உடை தரித்த பொலிசார் பின்தொடர்ந்தனர். இதனை அவதானித்த மாணவர்கள் மறைந்து செல்ல முயன்றபோது பத்து பதினைந்து பேர் அவர்களை சுற்றிவளைத்தபோது அவர்களிடம் 6 பேர் சிக்கினர். அவர்களில் நால்வரை கடத்தி சென்றனர்.

இச்சம்பவம் பற்றி மாணவதலைவர்கள்,அவர்களது சட்டத்தரணிகள் கடத்தப்பட்ட நால்வரும் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என விசாரித்தபோது, கடத்தல் எதுவும் இடம்பெறவில்லை என தெரிவித்த பொலிஸார் பின்னர் அவர்கள் கிருலப்பனை பொலிஸில் இருப்பதாக தெரிவித்தனர். ஏனைய 14 பேர் பேருந்தில் ஏறி சென்றபோது அவர்களை பின்தொடர்ந்த சிவில் உடை தரித்த பொலிசார் மாணவர் ஒருவரிடம் பிடிவராந்து ஒன்றை காண்பித்து அவரை கைதுசெய்ய முயன்றிருக்கிறார்.

பொலிஸார் காண்பித்த பிடிவராந்தில் குறிப்பிட்ட மாணவரின் பெயர் காணப்படாததினால் பிடிவராந்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெயர் தன்னுடையதல்ல என தெரிவித்த மாணவர் அதனை நிருபிக்க தனது அடையாள அட்டையை கானண்பித்துள்ளார். அதனை ஏற்காத பொலிஸார் அவரை கைதுசெய்ய முயன்றபோது அவருடன் கூடஇருந்த மாணவர்கள் அவரை கைது செய்வது அநீதியானது என வாதிட்டுளனர்.

இந்த சந்தர்ப்பத்தில் பேருந்தில் ஏறிய சட்டபூர்வ பொலிஸார் மாணவர்கள் கடமையை செய்ய இடையூறு செய்ததாக கூறி பேருந்தை கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்திற்க்கு கொண்டு சென்றுள்ளனர். அங்குவைத்து பொதுமக்கள் முன்னிலையில் மாணவர்களை மிகமோசமாக தாக்கியுள்ளனர்.

மாணவர்கள் படுகாயத்திற்குள்ளாகியிருப்பது தொடர்பில் பொலிஸாரிடம் கேட்டபோது அவர்கள் பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டபோது தாக்கப்பட்டிருந்ததாக பொலிஸரால் கூறப்பட்டது. பின்னர் இம்மாணவர்கள் நீதிபதி முன் ஆஜர்படுத்தப்பட்டனர். அங்கு மாணவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மாணவர்கள் கடுமையாக தாக்கப்பட்டிருப்பதனால் அவர்களை சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டபோதும் 18 மணித்தியாலங்களுக்குப் பின்னரே அவர்கள் சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டனர்.

வைத்திதிய சாலைக்கு அனுப்பப்பட்ட மாணவர்களில் மூவர் அவசர சிகிச்சை பிரிவிலும், மற்றும் ஒருவர் தலையில் கடுமையாக தாக்கப்பட்டதில் இரத்தம் கண்ணில் இறங்கியிருந்ததால் கண்வைத்திய பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளானர்.. மாணவர்களுக்கு கல்வி உரிமை மறுக்கப்படுகிறது, 4 வருட வகுப்புகள் 3 வருடமாக குறைக்கப்பட்டுள்ளது. இழந்த உரிமையை மீளப்பெறுவதற்காக போராடும் உரிமை மறுக்கப்படுகிறது.

## இலங்கை ஆசிரிய சங்க பிரதிநிதி

### -தோழர் யோசப் ஸ்டாலின்



தமது கல்வி கற்க்கும் உரிமைக்காக அமைதிவளியில் சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபடும் பல்கலைக்கழக மாணவர்களுடன் ஜனநாயகரீதியில் பிரச்சினையை அணுகி தீர்வூ காண்பதற்க்கு பதிலாக மாணவர்கள் மீதாக அடக்குமுறையை கட்டவிழ்த்து விடும் அரசாங்கத்தின் எதேச்சாதிகார போக்கை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது எடுத்துக்காட்டாகும். எதிரிகளாக கருதுபவர்களை அரசாங்கத்தின் இந்த போக்கை முறியடிக்க ஏற்புடையதாக மக்கள் சார்பு அரசியல் கட்சிகள், பொது நிறுவனங்கள், சிவில் அமைப்புகள் அனைத்தையும் ஒன்றிணைத்து வீதிக்கிறங்கி போராட வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. இதற்க்கு தேவையான அனைத்து ஒத்துளைப்புகளையும் வழங்க இலங்கை ஆசிரிய சங்கம் தயாராக உள்ளது.

## ஐக்கிய சோஸலிச கட்சி தலைவர்

### -தோழர் சிறிதுங்க ஜயசூரிய



ராஜபக்ச அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை படிப்படியாக பறித்து வருகிறது. மக்களும் .இதை படிப்படியாக புரிந்து வருகின்றனர். கல்வி தனியார் மயம், வைத்தியம் தனியார் மயம் என மக்களின் அடிப்படை தேவைகள் அனைத்தையும் தனியார் மயப்படுத்துவதில் ராஜபக்ச அரசாங்கம் தீவிரம்காட்டி வருகிறது. சுதந்திர கல்வியின் பாதுகாப்பை மையப்படுத்தியே மாணவர்களின் போராட்டங்கள் எழுச்சி பெற்று வருகின்றன. இந்த போராட்டங்களை சகிக்க முடியாத ராஜபக்ச அரசாங்கம் கட்டுமீறிய அடக்குமுறைகளை நேரடியாக மாணவர்கள்மீதாக கட்டவிழ்த்து விட்டுள்ளது இந்த அரசாங்கத்தை வீட்டுக்கனுப்புவதற்காக அனைத்து முற்போக்கு சக்திளையும் அணிதிரட்டி வீதிக்கிறங்கி போராட வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. இதற்கான அனைத்து ஒத்துளைப்புகளையும் வழங்க சோஸ லிசக் கட்சி தயாராக உள்ளது.

## நவசமசமாஜ கட்சி மத்திய குழு உறுப்பினர்


### -தோழர் ரஞ்சித் கமகே



கல்வியை தனியார் மயப்படுத்தும் அரசாங்கத்தின் செயல்திட்டத்தை தோற்கடிக்க அனைத்து முற்போக்கு சக்திகளும் ஒன்றிணைந்து போராட வேண்டும். மாணவர்கள் தமது கல்வி உரிமையை பாதுகாக்க ஆர்ப்பாட்டம், ஊர்வலம் பாதயாத்திரை போன்றவற்றை முன்னெடுப்பதை தடுப்பது அப்பட்டமான ஜனநாயக உரிமை மறுதலிப்பதாகும். மாணவர்களின் நியாயமான போராட்டம் வெற்றிபெற அனைத்து முற்போக்கு சக்திகளும் ஒன்றிணைந்து மாணவர்களுக்கு பாதுகாப்பு அரணாக செயல்பட வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது. இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதற்காக அனைத்து முற்போக்கு சக்திகளையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சியில் அர்ப்பணிப்புடன் செயற்பட நவசமசமாஜக் கட்சி தயாராக இருக்கிறது.

## சோஸலிசக் கட்சி மத்திய குழு உறுப்பினர்

### -தோழர் பி.டி.சரணபால



சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பல்கலைக்கழக மாணவர்கள் மீதாக பொலிஸ் அராஜகத்தை ஏவி விட்டிருக்கும் மஹிந்த அரசாங்கத்தின் நடவடிக்கையை சோஸ லிசக் கட்சி வன்மையாக கண்டிக்கிறது. மக்களின் பிரச்சினைகளை கலந்துரையாடி தீர்வூகாண தயாரில்லாத மஹிந்த அரசாங்கம் பல்கலைக்கழக மாணவர் பிரச்சினைக்கு அடக்குமுறை மூலம் தீர்வூகாண முயற்சிப்பதையே 16ஆம் திகதி சம்பவம் வெளிப்படுத்தியுள்ளதுஇவ்விடயத்தில் சோஸலிசக் கட்சி தனது உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை வழங்க தயாராக இருக்கிறது.

# அதிவேகப் பாதைகள்




நாடு பூராவும் அதிவேகப் பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆரம்பத்தில் கொட்டாவையிலிருந்து காலி வரை அமைக்கப்பட்ட அதிவேகப்பாதை ஒரு கோணத்தில் கடுவலை வரையிலும் மறு கோணத்தில் மாத்தறை வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது. அது முறையாக கடவத்தையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை நீடிக்கப்படக்கூடும். தற்போது கொழும்புக்கு வெளியிலான சுற்றுவட்ட அதிவேகப் பாதையினதும், கொழும்பு- கண்டி அதிவேகப் பாதையினதும் நிர்மாணிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து கட்டுநாயக வரையிலான அதிவேகப் பாதை திறக்கப்பட்டுள்ளதோடு, எதிர்காலத்தில் அது சிலாபம் மற்றும் புத்தளம் வரை நீடிக்கப்பட்டு மன்னார் அதிவேகப் பாதையோடு இணைக்கப்படவிருக்கிறது. அதிவேகப் பாதை என்பது அரசாங்கத்தின் பிரச்சாரத் திட்டத்தின் முக்கிய மைல் கல்லாக இருப்பதோடு, அது "ஆச்சரியத்தின் நுழைவாயில்" என அழைக்கப்படுகிறது. நாடு முழுக்க பொருத்தப்பட்டிருக்கும் பாரிய விளம்பரப் பதாதைகள் எமக்குக் கூறுவது, ஆச்சரியத்தின் வாயில் திறக்கப்படுவதாகவும், அது மஹிந்த சிந்தனையின் பிரதிபலன் என்பதாக.

அதிவேகப் பாதைகளினால் ஆச்சரியம் நிகழுமென கூறினாலும், எந்த ஆச்சரியமும் காண்பதற்கில்லை. அதனால் வாழ்க்கையில் நிம்மதி கிடைத்திருக்கின்றதா என்பது சந்தேகமே. முன்னர் போக்குவரத்திற்காக பாதையில் கால் கடுக்கக் காத்திருக்க வேண்டும். அந்த நிலை மாறி, காத்திருந்த நேரம் இன்று எஞ்சியிருக்கிறது. முதலீட்டாளர்களுக்கு கோடிக்கணக்கான இலாபத்தை குவித்துக் கொள்வதற்காக எஞ்சிய நேரத்தை தியாகம் செய்ய வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. போக்குவத்திற்காக ஒதுக்கிய நேரம் எஞ்சியிருக்கின்றது என்பதால் ஓய்விற்கு, பொழுது போக்கிற்கு, மனித உறவுகளை தக்க வைத்துக் கொள்ளவும், சமூக செயற்பாடுகளுக்கும் நேரம் போதவில்லை. என்றாலும் உழைக்கும் காலத்தை அதிகரித்துக் கொள்ள நேரம் கிடைத்திருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னர் வாசிக்கக் கிடைத்த ஒரு சிங்களக் கவிதையில் "அதிவேகப் பாதைகள் அமைக்கப்பட்டாலும், அப்பாதைகளில் உங்களை சந்திப்பதை விட, என்னை என்னாலேயே சந்திக்க முடியவில்லை" என்ற கருத்துப்பட இருந்தது. உண்மையும் அதுதான்.

இப்போது இந்த அதிவேக பாதை உட்பட ஒட்டுமொத்த திட்டமும் மஹிந்த சிநதனையின் பிரதிபலன் என பெயரிடப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ, மஹிந்த சிந்தனையின் மூலம் அதிவேகப் பாதைகள் அமைப்பதாக வாக்குறுதியளித்ததாகவும், 2011 - 2030 தேசிய இயற்பியல் திட்டத்தின் வாயிலாக அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டதாகவும் அரசாங்கத்தின் ஒவ்வொரு உத்தியோக அறிக்கையிலும் கூறப்படுகிறது. அந்த இயற்பியல் திட்டம் 2011 நவம்பர் 15ம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டு 2013 ஜனவரி 13ம் திகதி ஜனாதிபதி மஹுந்தரினால் நியமிக்கப்பட்ட தேசிய இயற்பியல் நிர்மாண சபையால் தயாரிக்கப்பட்டதாக' அன்றைய நாளிதழ்கள் தெரிவித்திருந்தன. ஆனால், 2007 ஜுலை 03ம் திகதி தேசிய இயற்பியல் திட்டம் என்ற பெயரிலேயே திட்டமொன்று வெளியிடப்பட்டிருந்தது. அப்போது நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சராக இருந்த ரோஹன திசாநாயக அத்திட்டத்திற்கு வழங்கிய முன்னுரையில் குறிப்பிட்டவாறு, இவ்வாறான திட்டம் சம்பந்தமான சட்டமூலம் அமைச்சு மட்டத்திலான ஒருங்கிணைப்புக் குழுவின் மூலம் 2000 ஆண்டு சந்திரிகா பண்டாரநாயகவின் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை முறைப்படுத்தப்பட்ட திட்டமாக்குவதற்காக தேசிய இயற்பியல் கவுன்ஸிலை அமைத்து, திட்டத்தை நிர்மாணிக்கும் பொறுப்பு 2003ல் ரணில விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலேயே குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. எனவே, அதிவேகப் பாதைகள் மஹிந்த சிந்தனையல்ல, ஐதேக - சுதந்திரக் கட்சி என்ற பேதமின்றி இலங்கைளை ஆளுபவர்களினது சிந்தனையின் விளைவுதான்.

ஆனால்,இதனை நன்றாக ஆராய்ந்தால், இத்திட்டம் இலங்கை ஆட்சியாளர்களின் சிந்தனையில் உதித்த ஒன்றல்ல என்பது தெளிவு. திட்டத்தை தயாரித்தது ரணிலில் தேசிய இயற்பியல் கவுன்ஸிலாகவோ அல்லது மஹிந்தவின் தேசிய பௌதீக நிர்மாண சபையாகவோ இருந்திருந்தால் இலங்கை சம்பந்தமான திட்டத்தையே தயாரித்திருக்க முடியும். இலங்கை அரசாங்கத்தினால் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட சபையால் இந்தியா அல்லது வேறு நாடொன்று சம்பந்தமான திட்டத்தை தயாரிக்க முடியாது. ஆனால் அதிவேக பாதை திட்டம் இலங்கைக்கு மாத்திரமானதல்ல. அது

> **"என்றாலும், அதிவேகப் பாதைகள் மஹிந்த சிந்தனையிந் பிரதிபலனல்ல, உலகமய திட்டத்தின் பிரதிபலனாகும். அரசாங்கத்தினாலேயே வெளியிடப்பட்ட வரைபடம் இதற்கு சிறந்த உதாரணமாகும்."**

முழு ஆசியாவையும் சம்பந்தப்படுத்தியதாகும். ஆசிய அதிவேகப் பாதை வலைப் பின்னல் நிர்மாணிக்கப்படுவதோடு, இலங்கையின் அதிவேக பாதை வலைப் பின்னல் தலைமன்னார் ஊடாக இந்தியாவின் ஆசிய அதிவேகப் பாதையோடு இணைக்கப்படுகிறது. இந்த அதிவேகப் பாதை வலைப் பின்னலுக்காக உத்தியோக ரீதியிலான ஒப்பமிடப்பட்டது 2005 ஜுலை 4ம் திகதியாகும். இந்தியா, பாகிஸ்தான், வங்காள தேசம், நேபாளம், ஆப்கானிஸ்தான், மியன்மார், லாவோஸ், கம்போடியா, சீனா, தாய்லாந்து, வியடநாம் உட்பட 32 ஆசிய நாடுகளில் 1,41,000 கிலோ மீட்டர் அதிவேகப் பாதை அமைக்கப்படுவதுடன், குறித்த ஒப்பந்தத்தில் 28 நாடுகள் ஒப்பமிட்டுள்ளன. இலங்கை சம்பந்தமான அதிவேகப் பாதைகள் திட்டத்தின் 2007 திட்டத்திலும், 2011 திட்டத்திலும் ஓரளவு மாற்றங்கள் உள்ளன. என்றாலும், அதிவேகப் பாதைகள் மஹிந்த சிந்தனையிந் பிரதிபலனல்ல, உலகமய திட்டத்தின் பிரதிபலனாகும். அரசாங்கத்தினாலேயே வெளியிடப்பட்ட வரைபடம் இதற்கு சிறந்த உதாரணமாகும். இந்த உலகமய திட்டம் சுநபயநைைெ ஞசைந டுயமெய என்ற பெயரில் ரணில் விக்கிரமசிங்க கொண்டுவந்தபோது அதனை கடுமையாக எதிர்த்த மஹிந்த ராஜபக்ஷ, இப்போது அதனை வேறு பெயரில் செயற்படுத்தி வருகிறார். இத்திட்டத்திற்காக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற வல்லாதிக்க நிதி நிறுவனங்கள் அனுசரணை வழங்குவது விளையாட்டுக்கல்ல. வல்லாதிக்க சக்திகளுக்கு அரசில் ரீதியில் ஆசியா மிக முக்கியமாகும். அவர்களுக்கு சவாலாக இருக்கும் சீனாவும் ரஸ்யாவும் மற்றும் அவர்களால் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாத வடகொரியா, வியடநாம் போன்ற நாடுகள் ஆசியாவில் அமைந்திருப்பதுதான் காரணம். உலக மூலதனத்திற்கு ஆசிய அவ்வளவு முக்கியம். தற்போதை உலக மக்கட் தொகையான 721 கோடியில் 442 கோடி மக்கள் அதாவது உலக மக்கட் தொகையில் அன்னளவாக மூன்றில் ஒரு பங்கு மக்கள ஆசியாவிலேயே வாழ்கின்றனர். சீனாவில் மாத்திரம் 139 கோடியும், இந்தியாவில் 126 கோடியும் வாழ்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது, ஆசியா சேவைகள் மற்றும் பண்டங்களின் மிகப்பெரிய வர்த்தகச் சந்தையாகவும்,உலக மூலதனம் ஆசியாவில் சுரண்டலை இலகுவாக்குவதற்காகவே ஆசிய அதிவேகப் பாதை வலைப் பின்னல் நிர்மாணிக்கப்படுகிறது. 2010 ஜுலை 23ம் திகதி வியட்நாமில் நடந்த ஆசிய அமைப்பின் மாநாட்டில் அமெரிக்க குடியரசின் செயலாளர் ஹிலரி கிளின்டன் தமது உபாய மார்க்கம் "மீண்டும் ஆசியாவின் பக்கம்' (Back to Asia) எனக் கூறினார். 2011 நவம்பர் 17ம் திகதி அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அதனை மீண்டும் உறுதி செய்தார். அவர் அங்கு உரையாற்றும்போது, 21ம் நூற்றாண்டு ஆசியாவுக்கு என்பதில் சந்தேகமில்லை என்பதோடு, அமெரிக்கா ஆசியாவின் மூலைமுடுக்கெல்லாம் இருப்பதில் சந்தேகமில்லையெனவும் கூறினார். தனது உரையின்போது "நாங்கள் ஆசியா - பசுபிக் பிராந்தியத்திற்கு வந்தது திரும்பிச் செல்வதற்கல்ல, இங்கேயே தங்கிவிடத்தான்" என நகைச்சுவையாக அவர் கூறினார். அது நகைச்சுவை அல்லவென்பதும், அந்நகைச்சுவையால் ஆசியாவின் கோடிக்கணக்கான மக்களில் கண்களில் கோபத்தால சிவப்பதை இத்திட்டத்தை பார்க்கும்போது தெரியும். "Back to Asia" என்பது உலக மூலதனத்தினது இத்தருணத்தின் திட்டமாகும். அதிவேகப் பாதைகள் திட்டம் அப்பாரிய திட்டத்தின் ஒரு பகுதி மாத்திரமேயாகும். ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக சீலையை தூக்கிக் கொண்டு திட்டித் தீர்க்கும் ராஜபக்ஷ அரசாங்கம் அத்திட்டத்திற்கும் ஊக்கமளிக்கிறது. இத்திட்டத்தின் ஆச்சரியம் கட்டியெழுப்பப்படுவது ஆசியாவில் வாழும், நாளொன்றுக்கு 2 டொலருக்கும் குறைவான வருமானத்தை பெறும் 170 கோடி ஏழைகளல்ல. ஏகபோக நிறுவனங்களாகும். ஆசியாவின் ஆச்சரியத்தின் நுழைவு அதிவேகப் பாதை வழியாக நிர்மாணிக்கப்படுவது எமக்காக அல்ல. உலக மூலதனத்தின் பெருச்சாலிகளுக்காகத்தான்.

2011 கூட்டணி அரசாங்கத்தின் உத்தேச அதிவேகப் பாதைகள்

1. கொழும்பு-காலி அதிவேகப் பாதை
2. காலி-மாத்தறை அதிவேகப் பாதை
3. அனுராதபுரம்-திருகோணமலை-ஹிங்குரக்கொடை-மட்டக்களப்பு-அம்பாறை-மொணமரகலை-ஹம்பாந்தோட்ட அதிவேகப் பாதை
4. கொழும்பு-கண்டி அதிவேகப் பாதை
5. கொழும்பு-நீர்கொழும்பு அதிவேகப் பாதை
6. கொழும்பு-யாழ்ப்பாணம் அதிவேகப் பாதை

**15 ஆம் பக்கம் பார்க்க...**

# மலையக அரசியலில் எதிர்

## உரையாடலும் உரையாடலும்




மலையக தலைவர்களை குறைகூறுவதே பல பத்திரிக்கை எழுத்தாளர்களுக்கு வேலையாகியுள்ளது. அவற்றை கவனிக்காது மக்கள் பணியை முன்கொண்டு செல்வதே தமது பணி என மலையக தலைவர்கள் சிலர் கூறி வருகின்றனர். பாராளுமன்றத்தில் பேசி நேரத்தை வீணடிக்க எங்கள் தலைவர்கள் விரும்பவில்லை. அவர்கள் செயல்வீரர்கள், எனவே மக்கள் பணியை நேரடியாக அரசாங்கத்திடம் பேசி செய்து வருகிறார்கள் என்று தலைவர்களின் மேல்மட்ட தொண்டர்கள் கூறி வருகின்றனர். இந்தப் பேச்சுக்கள் மக்களிடம் எடுபடக் கூடியவைகள் எனினும், இதில் உள்ளார்ந்தமாய் உள்ள ஜனநாயக விரோத அம்சங்களை அடையாளம் காண்பதை மலையக மக்கள் தவறவிடுவது அவர்களின் உரிமைகளுக்கு ஊறு செய்வதாகவே அமையும்.

அடிப்படையில் மக்கள் விரோத கருத்துக்களைக் கொண்ட ஒருவர் மக்களை ஆளுவதை பிரதிநிதித்துவ ஜனநாயக முறை சாத்தியப்படுத்தியுள்ளது. இந்த சாத்தியப்பாடு மக்கள் ஜனநாயகத்துக்கான தேவையை மேலும் மேலும் வலியுறுத்தி வருகிறது.

மலையகத்தின் வரலாறு மலையகத்தவர் ஒரு அரசியல் தலைவரை அல்லது ஒரு கட்சியை தமக்கான பிரதிநிதியாக தெரிவு செய்வதில் வாக்களிப்பவரின் குடும்ப அரசியல் பின்னணி, கல்வி, அரசியல் உணர்வுநிலை, இன உணர்வு என்பன செல்வாக்கு செலுத்துகின்றன. இந்த அம்சங்களை அனைத்தையும் தீர்மானிப்பவை மலையகத்தில் நிலவும் சமூக, அரசியல், பண்பாட்டு உரையாடல்களே. மலையக மக்களிடத்தில் உரையாடல்கள் இரண்டு வகையில் இடம்பெறுகின்றது. மலையக மக்களை சக்திப்படுத்தி உரையாடலில் அதிகளவில் இணைத்து செல்வதற்கான உரையாடல் ஒருபுறமாகவும், மலையக மக்களை உரையாடலில் இருந்து அப்புறப்படுத்துவதற்கான உரையாடல் மறுபுறமாகவும் இடம்பெறுகின்றது. மக்களை உரையாடலில் இருந்து வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் உரையாடல்கள் பல சந்தர்ப்பங்களில் மக்களுக்கு சார்பானதாக தோற்றம் காட்டுகின்றன. எனினும் உண்மையில் அவை நீண்டகால நோக்கில் மக்களை உரையாடலில் இருந்து ஒதுக்கிவைப்பதனை நோக்காக கொண்டவை. மக்களை உரையாடலில் இருந்து வெளியேற்றும் நோக்கைக் கொண்டமையினால் அவ் உரையாடல்கள் எதிர் உரையாடல்கள் என்று அடையாளப்படுத்தலாம்.

இந்த எதிர் உரையாடல் மக்கள் அதிகாரத்தை, மக்களின் நலன்களை, மக்களின் கருத்துக்களின் முக்கியத்துவத்தை, மக்களிடம் காணப்படும் விஞ்ஞானபூர்வமற்ற கருத்துக்களை விமர்சனம் செய்வதனை ஆதரித்து நிற்பதில்லை. எதிர் உரையாடல்கள் தலைவர்களின் கருத்தை ஏற்று நடக்கும் மக்களை உருவாக்குவதனை அடிப்படையாக கொண்டது. விமர்சனங்களுக்கு பதில் கூறாமை, மக்களுக்காக பேசுவதற்கு வழங்கப்பட்ட நேரத்தில் பாராளுமன்றத்தில் பேச மறுக்கின்றமையும் எதிர் உரையாடலின் உச்சம் என்பது சொல்லாமலே தெரியக்கூடியவை. எதிர் உரையாடல் மலையக மக்களை அரசியலில் வரலாறு நெடுகிலும் நிலைபெற்றுள்ள ஆறாத புண் என்று சொல்லாம்.

எதிர் உரையாடலில் அக்கறை கொண்ட மலையக தலைவர்கள் மக்களின் மீது தமது மேலாதிக்கத்தை நிலைநாட்ட அதிகார பலத்தை, சலுகை அரசியலின் பெறுபேறுகளை, அரசாங்கத்தில் தமக்கு இருக்கும் முக்கியத்துவத்தை மெருகூட்டி வெளிப்படுத்த வேண்டியுள்ளது. அடுத்ததாக இவர்களின் (எதிர்) உரையாடல்கள் அனைத்தும் பெருமளவில் தேர்தல்கள் வெற்றியை மையப்படுத்தியதாகவே இருக்கின்றமையும் காணலாம்.

இன்று எந்த மனிதனையும் வன்முறையை பயன்படுத்தி ஆளுகை செய்வது சாத்தியமில்லாத நிலையில், ஆட்சியாளர்கள் எதிர் உரையாடலை மேற்கொண்டு மக்களின் மீது தமது ஆளுகையை உறுதிப்படுத்தி வருகின்றனர். எதிர் உரையாடல் கூறுகளை மலையக மக்கள் அடையாளம் காண்பது மக்கள் ஜனநாயக பெறுமதிகளை நிலை நிறுத்த வழிவகுக்கும். எதிர் உரையாடல்களுக்கு பதிலாக உரையாடலை ஏற்படுத்துவது என்பது தனித்து தலைவர்களின் பணியாக இருக்க முடியாது அது தன்னளவில் மக்களை உள்வாக்கிக் கொண்டதாகும். தலைவர்கள் உரையாடலில் ஒரு பகுதியினரே தவிர தலைவர்களே உரையாடல்களை தீர்மானிக்க முடியாது.

எதிர் உரையாடல்களை மேற் கொள்பவர்கள் அனைவரும் உடனடியாகவோ அல்லது சற்று தாமதித்தோ மலையக சமூகத்தில் ஆதிக்க அரசியல் சக்திகளாக மாறிவிடுவர். தமது எதிர் உரையாடலின் அடிப்படையில் தமது மேலாண்மையை நிலைநாட்டுகின்றனர். வரலாறு முழுவதும் நிலவிய எதிர் உரையாடல் மலையக மக்களின் அரசியல் பண்பாட்டில் வேரூன்றியுள்ளது. தலைவர் சொன்னால் சரி, தலைவர்கள் பேசி சம்பளத்தை பெற்றுத் தருவார்கள் என்பன எதிர் உரையாடல் பண்பாட்டின் வெளிப்படைகள். மக்களால் எதுவும் செய்ய முடியாது என்பதாய் மக்களுக்கு உணர்த்துவதே இதன் அடிப்படை ஜனநாயக விரோத அம்சம்.


தேர்தல் ஜனநாயகத்தை கடந்து மலையக மக்கள் "மக்கள் ஜனநாயக"த்தை அனுபவிக்க வேண்டுமாயின் அது எதிர் உரையாடலுக்கு மாற்றான உரையாடலே சாத்தியப்படுத்தும். உரையாடல் பணி என்பது தனித்து அரசியல் கட்சி ஒன்றினால் ஏற்படுத்தப்படக் கூடியதல்ல. அரசியல் கட்சி ஒன்று உரையாடலை தொடக்கி வைக்கலாம் எனினும், அதனை பரந்து விரிந்து நிலைபெறுவதனை சாத்தியப்படுத்த மலையக மக்கள் அனைவரும் தங்களின் இயலுமைகளுக்கு உட்பட்ட வகையில் பங்குபற்றும் போதே சாத்தியமாகும்.

வரலாற்றை படைப்பவர்கள் மக்களே என்பதே உரையாடலின் சாரம். இந்த சாரத்தை எதிர் உரையாடல் மறுத்து வரும் நிலையில் உரையாடலே அதனை நிலை நிறுத்துவதற்கான ஒரே பாதையாக இருக்கின்றது.

மலையக தோட்டத் தொழிலாளி ஒருவர் தனது தொழில்சார் பிரச்சினைகளுக்கான உரையாடலை சக தொழிலாளர்களுடனும் தனது குடும்பத்திலும் அதனை ஏற்படுத்தலாம். அதற்கு அவர் ஊடகமாக தனித்து தனது பேச்சின் மூலமே மேற்கொள்ளலாம். கலை இலக்கிய முன்னோடிகள் அவற்றினூடாக உரையாடலை முன்னெடுக்கலாம். ஆசிரியர்கள் தங்கள் கற்றல் செயற்பாட்டினூடே உரையாடலை முன்னெடுக்கலாம். உரையாடலில் யாவரும் பங்காளர்களே என்பது நிலைநிறுத்தப்பட்டு அனைவரின் கருத்துக்களும் உள்வாங்கப்படுமாயின் மலையக மக்களின் அரசியல், சமூக பொருளாதார அம்சங்களில் நேர்கணிய நகர்வுகளை தடுக்க எவராலும் தடுக்க முடியாது.

உரையாடல் எல்லா பிரதேசங்களிலும் ஒரே மாதிரியாக ஒரே நேரத்தில் ஆரம்பமாக வேண்டும் என்று இல்லை. ஒரு இடத்தில் ஆரம்பமாகி அது மற்ற இடங்களுக்கும் வியாபிக்கலாம். உரையாடலை எதிர் உரையாடல்காரர்கள் சாத்தியமற்ற கற்பனையானது என்ற கூறுவதன் அடிப்படையே ஓர் எதிர் உரையாடல் அம்சமாகும். எதிர் உரையாடலை பேணுவதனை நோக்கமாக கொண்டது என்பது கண்டுகொள்ளப்பட வேண்டும்.

> **“ தேர்தல் ஜனநாயகத்தை கடந்து மலையக மக்கள் 'மக்கள் ஜனநாயக"த்தை அனுபவிக்க வேண்டுமாயின் அது எதிர் உரையாடலுக்கு மாற்றான உரையாடலே சாத்தியப்படுத்தும். ”**



மார்க்சியம் - 12

# ஆணின் சமூகத் தன்மையை நுகர்வாக்கம் அழித்தொழிக்கின்றது

இன்றைய உலகமயமாதலினான தனிவுடமைச் சமூக அமைப்பில், நுகர்வாக்கமே முதன்மையான மனித செயலாகின்றது. வரைமுறையின்றி நுகர்வதே, தனிமனித சுதந்திரமாக்கப்படுகின்றது. தனிமனிதனின் சுதந்திரமான நுகர்வுக்குத் தடையான அனைத்தையும் தகர்க்கின்றது. இரண்டு பேர் கூடி வாழ்வது கூட, தனிமனித சுதந்திரத்துக்கு முரணானதாகக் காட்டப்படுகின்றது. கூட்டுவாழ்வு தனிமனிதனின் சுதந்திரமான நுகர்வுக்குத் தடையாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது. இந்த வகையில் குடும்பம் என்னும் சமூக உணர்வாக்கம் கொண்ட சமூக அமைப்பு, தனிவுடமை முறைக்கு முரணானதாக முன்னிறுத்தப்படுகின்றது.ஷ

இந்த வகையில் குடும்பம் என்பது, தனிமனிதனின் சுதந்திரமான நுகர்வுக்கு தடையாக புரிந்து கொள்ளப்படுகின்றது. அதாவது குடும்பத்தில் இருப்பதால், தனிமனிதன் முடிவு எடுத்து சுதந்திரமாக நுகர முடியாது. இதற்கு மாறாக குடும்பத்தின் கூட்டு முடிவு அவசியமானதாகின்றது. இது நுகர்வை தடை செய்வதுடன், அதை மட்டுப்படுத்துகின்றது. அதாவது உடனடியான சுதந்திரமான நுகர்வுக்குத் தடையாகவும், தனிமனிதனின் நுகர்வுக்கும் தடையாகவும், குடும்பம் இருக்கின்றது. குடும்பம் நுகர்வின் அளவை மட்டுப்படுத்தி, சிக்கனத்தைச் செய்கின்றது. வரைமுறையற்ற நுகர்வுக்குப் பதில், தேவையை முதன்மைப்படுத்துகின்றது.

குடும்பம் மூலமான பொருளாதாரச் சிக்கனம், மூலதன நோக்கில் சந்தையில் கணிசமான தேக்கத்தை உருவாக்குகின்றது. மூலதனமோ தனது உற்பத்திற்கான உடனடியான நுகர்வை அடிப்படையாகக் கொண்ட சந்தையையும் அதை நுகரக்கூடிய சமூக அமைப்பையும் உருவாக்குகின்றது. இதற்கு முரணாகவே குடும்பம் என்னும் கூட்டுவாழ்வும், கூட்டுமுடிவும் இருக்கின்றது. இந்த வகையில் நுன் (மைக்ரோ) பொருளாதார நோக்கில், சமூகத்தன்மை கொண்ட குடும்பக் கூட்டுமுடிவுகள் மூலதனத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றது. மூலதனத்தைக் குவிப்பதை தனது குறியாகக் கொண்டு தூண்டும் நுகர்வாக்கத்தையும், அதன் வீச்சையும் குடும்பம் காலதாமதம் செய்து மட்டுப்படுத்துகின்றது.

குடும்ப நுகர்வு என்பது கூட்டுமுடிவு என்பதால், பகுத்தறிவுபூர்வமான சமூக உள்ளடக்கம் கொண்ட முடிவுகளாக இருக்கின்றது. இது நுகர்வைத் தூண்டும் பகுத்தறிவற்ற விளம்பரத்தையும், சமூகத் தன்மையற்ற தனிமனித முடிவுகளையும் மறுதளிக்கின்றது. நுகர்வில் தேவையை முதன்மைப்படுத்தி, வரைமுறையற்ற அவசியமற்ற நுகர்வை மறுக்கின்றது. நுகர்வை முதன்மைப்படுத்தும் தனிவுடமையிலான மூலதன அமைப்பு, குடும்பத்தை தடையாக கருதுகின்றது. அதாவது நுகர்வு அடிப்படையிலான சமூக அமைப்பின் சமூகப் பொருளாதார உள்ளடக்கம், குடும்ப அடிப்படையிலான சமூகப் பொருளாதார வடிவத்துக்கு முரணானதும், எதிரானதுமாகும். குடும்பம் நுகர்வாக்கத்துக்கு தடையாக இருப்பதால், மூலதனம் குடும்பத்தை தகர்க்கின்றது.

நுகர்வாக்கத்தை முதன்மைப்படுத்தி, இதை சுதந்திர மனித உணர்வாகவும் வாழ்வாகவும் முன்னிறுத்தி, குடும்பத்தை அதற்குத் தடையாகக் காட்டி தகர்க்கின்றது. தனிமனித நுகர்வு சார்ந்த பண்பாட்டுக் கலாச்சாரக் கூறுகள் மூலம், குடும்பம் சார்ந்த சமூக நுகர்வுப் பண்பாட்டு கலாச்சாரக் கூறுகளையே அழிக்கின்றது. குடும்பத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதுடன், குடும்ப வடிவத்தை மனித சுதந்திரத்துக்கு எதிராக முன்னிறுத்துகின்றது.

நுகர்வாக்க பண்பாட்டுக் கலாச்சாரக் கூறுகள் முதன்மை பெற்றுவரும் நிலையில், குடும்பம் சார்ந்து நிலவிய ஆணாதிக்கத்துக்கும், அதற்கு எதிரான பெண்ணியத்துக்கும் என்ன நடக்கின்றது? இதன் சமூகத் தன்மைகள், விளைவுகள் என்ன?

நுகர்வாக்க சமூகத்தில் தனிமனித நுகர்வை மையப்படுத்தி நடக்கின்ற மாற்றங்களின், எதிர்மறையான சமூகப் பொருளாதார பண்பாட்டு விளைவுகள் புரட்சிகரமானவையா? அதாவது ஆணைக் குடும்பத்தில் இருந்து விடுவிக்கும் போது, பெண் தனித்துவிடப்படுவதால் பெண் விடுதலை அடைகின்றாளா? ஆண் அற்ற பெண்ணின் தனிமையும், பெண் தலைமையில் எஞ்சும் குடும்பமுமா பெண் விடுதலை?

சமூக விடுதலையை அடிப்படையாகக் கொள்ளாத தனிப்பட்ட ஆணில் இருந்து பெண் விடுபடுவதையே பெண்விடுதலை என்ற தனிவுடமையை அடிப்படையாக கொண்ட பெண்ணிய கோட்பாடுகளும் நடைமுறைகளும், நுகர்வாக்க சமூக அமைப்பின் செயல்பூர்வமான விளைவுகளாக மாறி இருக்கின்றது.

மூலதனம் தனிமனிதனின் நுகர்வாக்கத்தை ”சுதந்திரமானதாக்கும்” போது, குடும்பம் சிதைந்து வருகின்றது. ஆணுக்கு எதிரான தனிவுடமையிலான பெண்ணிய கோட்பாடுகளுக்கு, இது பொருந்திப்போகின்றது. நுகர்வாக்கத்தை தூண்டும் மூலதனம் இதை பெண் விடுதலை என்கின்றது. தனிவுடமையை அடிப்படையாகக் கொண்ட பெண்ணியமும், இதையே பெண்விடுதலை என்கின்றது.

எங்கும் நுகர்வாக எல்லாம் நுகர்வாக மாறிவிட்ட உலகில், பாலியல் விதிவிலக்கல்ல. சமூக உணர்வாக்கம் கொண்டு இணைந்து செயற்பட்ட இயற்கையான பாலியல் செயற்பாடு, மனித விருத்தியை செய்தது. இதுதான் இயற்கையை அடிப்படையாகக் கொண்ட பாலியல் செயற்பாடாகும். இன்று இதன் தலைகீழ் வடிவம் பெற்ற பாலியல் நடைமுறையாகும்.

உண்மையில் என்ன நடக்கின்றது? குடும்பம் என்னும் சமூக அமைப்பில் இருந்து ஆணை அகற்றும் போது, பெண் குடும்பத்தை தனித்துச் சுமக்கின்றாள். அதாவது ஆண் தனது சமூக பொறுப்பிலும் கடமையிலும் இருந்து அகலும் போது, பெண் மீதான சுமையாக மாறுகின்றது. குடும்பத்தை பராமரிக்கின்ற இரட்டைச் சுமையாகிறது. அதேநேரம் குடும்பமல்லாத பெண்ணின் பாலியல் வாழ்வு தான் பெண்விடுதலை என்பது, சாராம்சத்தில் வக்கிரமடைந்த ஆணாதிக்கமாக மாறுகின்றது.

குழந்தையைச் சுமக்கும் இயற்கையான தாய்மை சார்ந்து பெண் கொண்டிருக்கும் சமூக உணர்வு, குடும்பத்தில் இருந்து விலகும் ஆணுக்குக் கிடையாது. தனியுடமைக் கண்ணோட்டத்தில் தனித்து விடுகின்றதும், குடும்பத்திலிருந்து விலகி விடுகின்ற போது, ஆண் பெண்ணின் பாலியல் நடத்தை நுகர்வுக்குரியதாகி விடுகின்றது. ஆண் - பெண் குடும்பமல்லாத சூழலிலான பாலியல் நடத்தை தோன்றுகின்றது. இந்தப் பாலியல் நடத்தை என்பது சமூக உணர்வாக்கம் கொண்டதல்ல. மாறாக பாலியல் செயற்பாடு தனிவுடமையிலான சுயநலன் கொண்ட உணர்வு சார்ந்தது, வெறும் நுகர்வாக்கம் கொண்டதாக வெளிப்படுகின்றது. ஆண் நுகர்வாளனாகவும், ஆணின் ”சுதந்திர” நுகர்வை பெண் அனுபவிப்பவளாகவும் மாற்றிவிட்ட நுகர்வாக்க அமைப்பு என்பது, இடைவெளியும் பிரிவும், ஆணாதிக்கத்தில் இருந்து விடுபடுவதல்ல. மாறாக நுகர்வாக்கத்துக்கு உட்பட்ட, ஆணாதிக்க வக்கிரத்துக்கு உள்ளாவதாகும். முன்பு குடும்பம் சார்ந்த பாலியல் நடத்தையில் இருந்த சமூகத் தன்மைக்கு பதில், நுகர்வாக்கமாக குறுக்கி விடுகின்றது. முன்பு வரைமுறையற்ற பாலியல் நுகர்வுக்கு தடையாக இருந்த சமூக உள்ளடக்கத்தை நுகர்வு அகற்றிவிடுகின்றது. ஆண் பாலியலை அணுகும் விதம், பெண்ணில் இருந்து நேர் எதிரானதாக மாறுகின்றது. ஆண் நுகர்வோனாக மாறுகின்றான். பெண்

நடத்தை என்பது, குழந்தைப் பராமரிப்பில் இருந்து ஆணை விடுவித்து பாலியலை வெறும் நுகர்வாக்கி விடுகின்றது. சமூகத் தன்மையை நீக்கி நுகர்வே மனித நடத்தையாக, ஆணாதிக்கத்தின் தன்மை மாறுகின்றது. நுகர்வாக்கம் குடும்பத்தில் இருந்தும் ஆணை விடுவிக்கின்றது. ஆண் குடும்பத்திற்காக உழைக்கவோ, வாழவோ வேண்டியதில்லை. குடும்பம் என்னும் சமூகத் தன்மையை நீக்கிய நிலையில், பெண்ணின் சமூக இருப்பையே பெண் ”விடுதலை” என்கின்றனர். ஒரு பெண் ஆணிலிருந்து விலகி தனித்து வாழ்தலா, பெண் விடுதலை? இது தனிவுடமை சார்ந்த ”பெண்ணிய” உள்ளடக்கமும் கண்ணோட்டமாகும். இந்த ”பெண்ணியம்” சாராம்சத்தில் நுகர்வாக்க அமைப்பிலான சந்தை உள்ளடக்கம் சார்ந்த நுகர்வின் வக்கிரமாகும். இங்கு சமூக உணர்வுக்கு இடமில்லை.

சமூகப் பராமரிப்பு சார்ந்து குடும்பத்தையும், குழந்தையையும் மறுக்கின்ற பாலியல் நடத்தை என்பது, தனிவுடமைக் கண்ணோட்டத்திலான நுகர்வு சார்ந்த ஆணாதிக்க உள்ளடக்கமாகும். இந்த ஆணாதிக்க சமூக அமைப்பில், சமூகத் தன்மையற்ற பாலியலாக வக்கிரமடைகின்றது. தனியுடமைச் சமூக அமைப்பில் ஆண் பெண் நுகரப்பட வேண்டியவளாக, அதற்கு இணங்குகின்றவளாக மாறுகின்றாள். இங்கு பொருளைப் போல் வரைமுறையற்ற வகையில் நுகர்வதே, பாலியலின் பொது சாரமாகின்றது.

உண்மையில் தனிவுடமை சார்ந்த வரைமுறையற்ற நுகர்வாக்கம் என்பது, சமூகத் தன்மையை இல்லாதாக்குகின்றது. பாலியலைக் கூட நுகர்வாக்கமாக குறுக்கி

**11 ஆம் பக்கம் பார்க்க...**



# இந்திய கடலாதிக்கத்தால் அல்லற்படும் எம் வாழ்க்கை

இளமைக்காலங்களில் இருந்து ஒரு நினைவு மீட்டல்:

எனது கிராமம் இலங்கையின் பொருளாதார அடிப்படையில், ஒப்பீட்டளவில் அனேகமாக நடுத்தரவர்க்க மீனவர்களைக் கொண்ட கிராமம். அங்கு எனது தந்தைவழி மாமா ஒருவர். அவரை ஐயாமாமா என்று நாங்கள் அன்பாக அழைப்போம். அவரை எங்கு கண்டாலும் பக்கத்தில் வந்து □ஒழுங்கா படிக்கிறியா மருமகன்□ என்று விசாரித்து விட்டு, எனது சேட்டு பையில் பணம் வைத்து விட்டு போவார். அதில் குறைந்தது





ஐம்பது ரூபாயாவது இருக்கும். நாங்கள் அவரை ஐயாமாமா என்று அழைத்தாலும், ஊருக்கு வெளியில் அவரை "சர்க்கரை சம்மாட்டி" என்று அழைப்பார்கள். சிறிமா ஆட்சிக்காலத்தில் அவர் பதின்மவயதில் இருந்தபோது, அதிகாலை வேளை கோர்வலை வைக்க கடற்கரை பக்கம் சென்றார். அங்கே கரையில் ஆளில்லாத கட்டுமரமொன்றில் சர்க்கரை மூட்டைகள் இருப்பதைக் கண்டார்.

கடத்தல்காரர்கள் கட்டுமரத்தை கரையில் விட்டுவிட்டு அருகிலிருந்த பற்றைக்கருகில் நித்திரை கொள்வதை கவனித்த அவர், கட்டுமரத்துடனும், சர்க்கரை மூட்டைகளுடனும் தலைமறைவானார். பலவருடங்கள் கழித்து எழுபத்தி ஒன்பதாமாண்டு,TOYOTA ROSA வாகனத்தில் நான்கு பிள்ளைகளுடனும் மனைவியுடனும் ஊரில் வந்து இறங்கினார். ஊரில் அவரின் மனைவியை சிங்களத்தி என கிசுகிசுத்தனர். நெருங்கிய அவரின் குடும்பத்தினர் அவர் மனைவி தமிழச்சி தான் என்றும், அவர்கள் நீர்கொழும்பைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கு சரியாக தமிழ் கதைக்கத் தெரியாதெனவும் கூறினர். மாமா வரும் போது தனக்கு சொந்தமாக ரோசா மினிபஸ்சுடன் மட்டும் வரவில்லை. எமது ஊருக்கு முதன்முதலாக உள்ளக இயந்திரம் இணைத்த பாரிய மரத்தாலான படகுடன் தொழிலுக்குத் தேவையான, ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்த நவீன வலைகள் உபகரணங்களுடனும் வந்திருந்தார். உபகரணங்களும் படகும், அவரின் மனைவியின் உறவினர்களும் சில தென்னிலங்கை தொழிலாளிகளும் கடலால் எமது ஊருக்குக் கொண்டுவந்தனர்.

ஊரே மூக்கில் விரலை வைத்து அதிசயமாகப் பார்த்தது. இவ்வாறு சர்க்கரை கடத்தியவனிடமிருந்து இவர் களவாடியதனாலும், அதை வைத்து படகு வேண்டியதும் தான் இவர் "சர்க்கரைச் சம்மாட்டி" என்று அழைக்கப்பட்டதன் பின்னணி.

ஆனால் இலங்கை மீன்பிடிச்சமூகத்தில் அது சிங்களவன் ஆனால் என்ன, தமிழன் ஆனால் என்ன, கூலி கொடுக்கும் வழமை எந்தக்காலத்திலும் இருந்ததில்லை. இலங்கையில் பங்குமுறை தான் பரம்பரை பரம்பரையாக இருந்து வருகின்றது.

> “ இலங்கை மீன்பிடிச்சமூகத்தில் அது சிங்களவன் ஆனால் என்ன, தமிழன் ஆனால் என்ன, கூலி கொடுக்கும் வழமை எந்தக்காலத்திலும் இருந்ததில்லை. இலங்கையில் பங்குமுறை தான் பரம்பரை பரம்பரையாக இருந்து வருகின்றது. ”

சம்மாட்டி என்றால் வழமையாக "முதலாளியாகவே" விளங்கிக் கொள்ளும் தன்மை கடற்தொழிலுக்கு சம்பந்தமில்லாதவர்களிடமுண்டு. வழமையாக முதலாளிகள் தொழிலாளிகளுக்கு நாட்கூலி, அல்லது மாதக்கூலி கொடுப்பது வழக்கம்.

உதாரணமாக பிடிக்கப்படும் மீனின் வருமானத்தில், எரிபொருள், மற்றும் தொழிலாளிகளின் சாப்பாட்டுச்செலவு போக, மீதமானது படகும் வலையும் ஒருவருக்கு சொந்தமானால் அவருக்கு இரண்டு பங்கும் தொழிலாளிகளுக்கு ஆளுக்கு ஒரு பங்கும் வழங்கப்படும். வள்ளம் வலை வைத்திருப்பவர் கடன் வாங்கி, வட்டி கட்டினால் அதற்கு தொழில் நன்றாக இருக்கும் போது ஒரு பகுதியை ஒதுக்குவர். அதேபோன்று ஒரு தொழிலாளியின் குடும்பத்தில் ஏதாவது நல்லது, கெட்டது நடந்தால் ஒருநாள் உழைப்பையோ அல்லது உழைப்பின் ஒரு பகுதியையோ வழங்குவதும் வழமை. இதில் கிராமத்திலுள்ள மற்ற தொழிலாளர்களும் பங்கெடுப்பது இயல்பாக நடப்பதொன்று. இதேபோலவே கிராமங்களில் பள்ளிக்கூடம் திருத்துதல், கோவில் திருவிழா, வீதி செப்பனிடல் போன்ற பொது செலவுகளுக்கும் உழைப்பை வழங்குவர். இதை "உழைப்பெடுத்தல்" என்று கூறுவர்.

சர்க்கரைச் சம்மாட்டி- எனது மாமனும் சமுதாய வழமைக்கேற்ப பங்கு வழங்கி தொழில் நடத்துபவராக விளங்கினார். எண்பத்தி மூன்றாம் ஆண்டிற்கு பிற்பாடு கடல்வலைய மீன்பிடி தடைச்சட்டம் இலங்கை அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது. சர்க்கரை மாமாவின் தொழில் முடக்கப்பட்டது. எண்பத்தி ஆறாம் வருடம் முற்றாக தொழில் செய்ய முடியாததனால் அவரின் இயந்திரப்படகு கரையில் ஏற்றப்பட்டிருந்தது. அந்தக் காலப்பகுதியில் காரைநகர் கடற்படை முகாமை சேர்ந்த "வீரய சூரைய" என்ற பீரங்கிப் கப்பல் கடலில் இருந்து கரையை நோக்கி எந்தவிதக் காரணமும் இல்லாமல் குண்டுமழை பொழிவது வழக்கம். இதனால் மீன்பிடி சமூகத்தை சேர்ந்தவர்கள் பலர் கொல்லப்பட்டனர். வீடுகளும், கரையில் நின்ற படகுகளும், உபகரணங்களும் அழிக்கப்பட்டது. எண்பத்தாறாம் வருடம் சித்திரை மாதத்திலொரு நாள் வீரய சூரைய பீரங்கியின் குண்டுகள் சர்க்கரை மாமாவின் கரையோரமிருந்த அவரின் வீட்டையும், அதன் முன் ஏற்றியிருந்த படகையும் முற்றாக அழித்தன. குண்டு விழுந்து படகு தீப்பற்றி எரிந்தது. குடும்பத்தினர் காயங்களுடன் உயிர்தப்பினர். நிபிள்பைவ்-555 சிகரட்டுடன், கிப்ஸ் சாறமும் வெள்ளைச் சேட்டும் அணிந்து கம்பீரமாக வலம் வந்தவர், குறுகிப்போனார். வறுமை தாக்கியது. மூத்தமகளுக்கு சீதனம் கொடுக்கக் கடனாக வாங்கிய பணத்தை திருப்பி அடைக்க முடியாமல் திண்டாடினார்.

அதுவரை தமிழ் தேசியவிடுதலைப் போராட்டம் பற்றி எந்தக் கருத்தும் இல்லாதிருந்தவர், திடீர் தேசியவாதியானார். மூன்று மகன்களில் ஒருவன் புலியில் சேர்ந்தான். மற்ற இருவரும் கல்வியை நிறுத்தி விட்டு நாளாந்த சீவியத்தை கவனிக்க கரைசார் கடற்றொழிலில் ஈடுபட்டனர். பின்வந்த காலத்தில் நிபிள்பைவ் சிகரட் வாங்க வசதியில்லாவிட்டாலும் ஆர்.வி.ஜி பீடி கையில் ஏந்தியபடி பழைய கம்பீரத்துடன் அவர் தமிழ்ஈழ ஆதரவாளராக வலம் வந்ததுடன் வன்னிக்குப் புலம்பெயர்ந்து தொழில் செய்தார். முள்ளிவாய்க்கால் அவலத்தில் எல்லாம் இழந்தவர் ஊர் திரும்பி மறுபடியும் தனது பிள்ளைகளுடன் கடற்றொழில் செய்து வயிற்றைக் கழுவ முயலுகின்றார். அன்று படகும் வீடும் அழிந்தபோது தேசியவாதியாகி தமிழீழம் தான் முடிவென்று தன் பிள்ளையை போராட அனுப்பியவர்,இன்று அதே பிள்ளைகளுடன், அவர் தனது குடும்பத்தின் அன்றாட செலவுக்காக கடலில் இருந்து வரும் வருமானத்தை தடுக்கும் இந்திய அழிவு மீன்பிடியை எதிர்த்து மாதகல் கரையிலும், பருத்தித்துறை முனையிலும் சகதொழிலாளிகளுடன் இணைந்து போராடுகிறார். அன்று அவர் படகும் வீடும் அழிந்தபோது, சரி பிழைகளுக்கப்பால் அவரது அரசியல் அபிலாசையைப் பயன்படுத்த ஏதோ ஒரு சக்தி அன்று இருந்தது. இன்று அவர் அன்றாடம் காச்சியாகி, நாளாந்த சோற்றுக்கே கஸ்டப்படும் வேளை அவரின் நியாயமான போராட்டத்தை நெறிப்படுத்தவோ,ஆதரவு வழங்கவோ இன்று ஒருவருமில்லை.

# சுதந்திர கல்விக்கு வைத்த வேட்டு! பல்கலைக்கழக மாணவர்களை பதம்பார்க்கிறது!



இணைந்த சுகாதார பட்டபடிப்பிற்கான நான்கு வருடகால எல்லையை மூன்று வருடமாக குறைத்ததன் மூலம், மேற்படி பட்டப்படிப்பின் வலிமை குறைக்கப்பட்டுள்ளது. இந்த கைங்கரியம் நீதிமன்ற தீர்மானத்துக்கு இணங்க அரங்கேற்றப்பட்டிருக்கிறது. எந்தவொரு பட்டப்படிப்பிற்குமான கால எல்லையை தீர்மானிக்கும் அருகதையும் உரிமையும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கே உரித்தாகும். இந்த நடைமுறை யதார்த்தத்திற்கு முரணாக நீதிமன்ற உத்தரவு மூலம் இணைந்த சுகாதார பட்டப்படிப்பிற்கான கால எல்லை மூன்று வருடமாக குறைக்கப்பட்டுள்ளது. கல்வியை சந்தைபொருளாக்கும் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே மேற்படி பட்டப் படிப்பிற்கான கால எல்லையை அரசாங்கம் குறைத்துள்ளது. இந்த காலஎல்லை குறைப்புக்கு எதிராக அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியம் ஆரம்பத்தில் இருந்தே தனது எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்தது. மாணவர் ஒன்றியத்தின் எதிர்ப்பை பொருட்படுத்தாத அரசாங்கம், சுதந்திரக்கல்வியை படிப்படியாக காலாவதியாக்கும் செயல்திட்டத்தை முன்னெடுப்பதிலேயே தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வருகிறது. அரசாங்கத்தின் இந்தப்போக்கானது எதிர்காலத்தில் ஏழை மாணவர்களின் கல்விக்கு வைக்கும் வேட்டு என்பதை உணர்ந்த அ.ப.மா.ஒன்றியம், இணைந்த சுகாதார பட்டப்படிப்பிற்கான காலஎல்லை குறைப்பை ரத்துசெய்யக்கோரி அமைதி வழியில் சத்தியாகிரக போராட்டத்தை ஆரம்பித்தனர். சத்தியாகிரக போராட்டம் 100 நாட்களை தாண்டி சென்றபோதும் அரசாங்கம் பல்கலைக் கழக மாணவர்களின் சத்தியாகிரக போராட்டத்தை கிஞ்சித்தும் கவனத்தில் கொள்ளவில்லை. எனவேதான் பல்கலை கழக மாணவர்கள் சத்தியாகிரக போராட்டத்திற்க்கும் மேலதிகமாக, ஆர்ப்பாட்டம், பாதயாத்திரை என போராட்டத்தை விரிவுபடுத்தினர். இதனை அவதானித்த அரசாங்கம் நீதிமன்றம் மூலம் மாணவர் போராட்டங்களை தோற்கடிக்கும் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டது.

ஆரம்பத்தில் பொலிசார் மாணவர்கள் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை தடுப்பதற்காக தடைஉத்தரவு கோரி நீதிமன்றம் சென்றனர். நீதிமன்றம் மாணவர்களை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடக்கூடாது, அதற்குப் பதிலாக கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை நடத்தும்படியும் உத்தரவிட்டது. இங்கு வேடிக்கை என்னவெனில் போராட்டம் நடத்தப்பட வேண்டிய இடத்தை தீர்மானிக்கும் மாணவர்களின் அடிப்படை உரிமையை மறுதலித்த நீதிமன்றம் போராட்டம் நடத்தப்பட வேண்டிய இடத்தையும் தீர்மானித்து. உத்தரவிட்ட உலகமகா புதுமையும் நடந்தேறியது. ஆனாலும் மாணவர்கள் ஏற்கனவே தீர்மானித்தபடி பல்கலைகழக மானிய ஆணைக்குழு முன்பதாகவே ஆர்ப்பாட்டத்தை நடாத்திமுடித்தனர். இதை அடுத்து பல்கலைகழக மாணவர்களின் ஆர்ப்பாட்டம், பாதயாத்திரை போன்ற நடவடிக்கைகளை தடைசெய்யும் வகையில் நீதிமன்றில் தடையுத்தரவொன்றை பொலிசார் பெற்றுக்கொண்டனர். அரசியலமைப்பு ரீதியாக உறுதிசெய்யப்பட்டிருக்கும் ஜனநாயக உரிமைகளை மறுதலிக்கும் பொலிசாரின் நடவடிக்கையை நிராகரித்த பல்கலைக்கழக மாணவர்கள் சுதந்திரக்கல்வியை பாதுகாக்கும் சத்தியாகிரக போராட்டத்தை வலுப்படுத்தும் வகையில் பாதயாத்திரை, ஆர்ப்பாட்டம் போன்ற நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டனர்.

மே 16ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவிட்டு கலைந்து செல்லும்போது, அவர்களை சாதாரண உடை அணிந்த சிலர் பின்தொடர்வதை அவதானித்த மாணவர்கள் மறைந்து செல்ல முயன்றிருக்கிறார்கள். அச்சமயம் அவர்களை சுற்றிவளைத்ததில் ஆறு மாணவர்கள் சிக்கியுள்ளனர். அவர்களில் நான்கு மாணவர்களை முச்சக்கர வண்டிகளில் ஏற்றி சென்றுள்ளனர். இச்சம்பவத்தை நேரில் கண்ணுற்ற எவரும் மணவர்கள் கடத்திசெல்லப்படுவதாகவே கருதியிருப்பர். இச்சம்பவம்பற்றி மாணவர் தரப்பு பொலிஸ் நிலையங்களில் விசாரித்தபோது இச்சம்பவம் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்ற பதிலே கிடைத்தது. பின்னர் நான்கு மாணவர்களும் கிருலப்பன பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் தரப்பு தெரிவித்தது. இதிலிருந்து நான்கு மாணவர்களும் சட்டவிரோதமாக கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் என்பது தெளிவானது. மறுபுறமாக ஆர்ப்பாட்டம் முடிந்து கலைந்து சென்ற மாணவர்களில் ஒரு பிரிவினர் பேருந்து ஒன்றில் ஏறி சென்றுள்ளனர். அவர்களையும் சாதாரண உடை அணிந்த சிலர் பின்தொடர்ந்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாணவர் ஒருவரிடம் வேறொருவரின் பிடியாணை ஒன்றை காண்பித்து அவரை கைதுசெய்வதாக கூறியுள்ளார். பிடியாணையை அவதானித்த மாணவர் பிடியாணைக்குரிய நபர் தான் அல்ல எனவும் அதனை உறுதிசெய்ய தனது அடையாள அட்டையை காண்பித்துள்ளார். அதை ஏற்றுக்கொள்ள மறுத்த அந்தநபர் மாணவனை கைதுசெய்ய முயன்றிருக்கிறார். இதனை அவதானித்த பேருந்தில் பயணித்த ஏனைய மாணவர்கள் பிடியாணையுடன் தொடர்பற்ற மாணவரை கைதுசெய்வது அநீதியானது என வாதிட்டுள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில்' உத்தியோக உடையணிந்த பொலிஸார் பேருந்தில் ஏறியுள்ளனர். இதையடுத்து பொலிஸ ாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதை தொடர்ந்து பேருந்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது. பொலிசாரை அவர்களது கடமையை செய்யவிடாது இடையூறு செய்ததாக மாணவர்கள் மீது குற்றம் சுமத்தி பேருந்தில் பயணித்த 14 மாணவர்களையும் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் பொலிஸாரின் மிருகத்தனமான தாக்குதலுக்கு இலக்காகினர். பின்னர் நீதிபதி முன் ஆஜர்செய்யப்பட்டனர். அங்கு மாணவர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் மோசமான தாக்குதலுக்கு இலக்காகிய மாணவர்களை வைத்திய சிகிச்சைக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொண்டனர். ஆனால் படுகாயமுற்ற மாணவர்கள் 18மணித்தியாலங்களின் பின்பதாகவே சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு அழைத்து செல்லப்பட்டனர். அதிலும் தலையில் படுமோசமான தாக்குதலுக்குள்ளாகி கண்ணுக்குள் இரத்தகசிவு பாதிப்புக்கு உள்ளான மாணவனுக்கு உரிய சிகிச்சை வழங்கப்படவில்லை. மனிதாபிமானமற்ற இச்செயற்பாடானது அப்பட்டமான அடிப்படை மனிதஉரிமை மீறலாகும்.

மே 19ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மாணவர்களை தவிர்த்து விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மாணவர்கள் கோட்டை நீதிமன்றில் கொம்பனி வீதி பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டனர். அனைத்து மாணவர்களையும் இரண்டுலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுவித்த நீதிபதி எதிர்காலத்தில் தனித்து பொலிஸ்தரப்பு கோரிக்கைக்கு மட்டும் செவிமடுத்து ஆர்ப்பாட்டம், ஊர்வலம் போன்றவற்றுக்கு தடைவிதிப்பதற்க்குப் பதிலாக இருதரப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியே தீர்மானம் மேற்கொள்ளப்படும் என உறுதிபட தெரிவித்துள்ளார். நீதிபதியின் இவ்வறிவிப்பானது கடந்தகாலங்களில் நீதிமன்றுகளை பொலிஸார் தவறாக பயன்படுத்தியுள்ளனர் என்பதனையே வெளிப்படுத்துகிறது.

மறுதலிக்கப்படும் தமது கற்றல் உரிமையை மீட்டெடுக்க இணைந்த சுகாதார பட்டப்படிப்பு மாணவர்கள் முன்னெடுத்த அமைதிவளி போராட்டங்களை முறியடிக்க, அரசாங்கம் கட்டவிழ்த்து விட்ட மிகமோசமான அடக்குமுறைகள் நாட்டுமக்கள் மத்தியில் மணவர்கள் மீதாக பாரிய அனுதாபத்தை உருவாக்கியுள்ளது. இதனால் மாணவர்களின் கோரிக்கை தொடர்பில் விரும்பியோ விரும்பாமலோ அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளது. இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் தற்போது நடைமுறையில் இருக்கும் நவலிபரல்வாத முதலாளித்துவ அரசியல், பொருளாதார முறைமையின்கீழ் பல்கலைக்கழக மாணவர் பிரச்சினைக்கு மட்டுமல்ல நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் எந்தவொரு பிரச்சினைக்கும் நிரந்தரதீர்வு கிடைக்கப் போவதில்லை. அதேபோல் சுதந்திர கல்வி, சுதந்திர சுகாதார சேவை போன்ற மக்கள் நலன் பேணும் திட்டங்களை படிப்படியாக ரத்துசெய்து இவற்றை விற்பனை பொருளாக்கும் நிகழ்ச்சிநிரலை அரசாங்கம் கைவிடப்போவதும் இல்லை. அதேவேளை தற்போது பல்கலைக்கழக மாணவர் பிரச்சினை ஏற்படுத்தியுள்ள நெருக்கடியில் இருந்து தப்பிக்கொள்ள அரசாங்கம் தற்காலிக தீர்வை அல்லது காலம்கடத்தும் தந்திரோபாயங்களை கையாளக்கூடும். இதற்க் ஏற்புடையதாக பல்கலைக்கழக மாணவர் பிரச்சினைக்கு பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கும் யோசனையை அரசியல் கட்சி ஒன்று பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கிறது. இந்த யோசனையானது அரசாங்கம் மாணவர் பிரச்சினைய இழுத்தடிக்க போதுமானதாகும். இந்த எதார்த்தங்களை பல்கலைக்கழக மாணவர்கள் விளங்கிக் கொண்டு, கல்வித்துறை எதிர்கொள்ளும் சவால்களை நிரந்தரமாக தோற்கடிக்க ஏற்புடையதாக தற்போது நடைமுறையில் இருக்கும் நவலிபரல்வாத முதலாளித்துவ முறைமையை தோற்கடிக்கும் பொது போராட்டத்தில் அணிசேர்வதே பொருத்தமான நடவடிக்கையாகும் அதற்கான காலம்கனிந்துள்ளது.

கல்வித்துறையை வியாபாரப் பொருளாக்கும் நிகழ்ச்சிநிரலுக்கேற்பவே இணைந்த சுகாதார பட்டப்படிப்பிற்கான நான்கு வருட காலஎல்லை மூன்றுவருடமாக குறைக்கப்பட்டது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்து முதலில் பேராதெனிய, ருகுணு பல்கலைகழக மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். அடுத்து கொழும்பு, ஜயவர்த்தனபுர மாணவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர் மே 07ஆம் திகதி முதல் யாழ், கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களும் இணைந்த சுகாதார பட்டப்படிப்பிற்கான விரிவுரைகளை பகிஷ்கரிக்கும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். வரலாற்றில் முதல்தடவையாக இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளை புறம்தள்ளி நாட்டிலுள்ள ஆறு பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்றிணைந்து போராட்டத்தில் குதித்துள்ளார்கள். இதேஒற்றுமையுடன் தற்போது நடைமுறையிலிருக்கும் மக்கள் விரோத நவலிபரல்வாத முதலாளித்துவ அரசியல்,பொருளாதார முறைமையை தோற்கடித்து நடைமுறை சாத்தியமான புதிய மக்கள்சார்பு அரசியல்முறைமைக்கான போராட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டியது கட்டாய மானதாகும். தவறின் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமல்ல ஏனைய ஒடுக்கப்பட்ட மக்கள்பிரிவினர் எதிர்கொள்ளும் எந்தவொரு பிரச்சினைகளுக்கும் தீர்வேதுமின்றி, நவலிபரல்வாத முதலாளித்துவ அரசியல், பொருளாதார முறைமையின் அடக்குமுறைக்குள் சிக்கி சீரழிவது தவிர்க்க முடியாததாகும்.

# வன்னி விவசாயிகளின் கட்
# கோருகின்றது தமிழ் தேசியம்

மகாபாரதத்தில் ஏகலைவனின் கட்டைவிரலை வெட்டியது இந்துத்துவ சாதிய தர்மம் என்றால், வன்னி விவசாயத்துக்கான நீரை வெட்டி விவசாயத்தை அழித்துவிட முனைகின்றது நவதாராள தமிழ் தேசிய தர்மம். நீரற்ற வன்னியில், மக்கள் வாழவே முடியாது. வன்னி மக்களின் வாழ்வு இனமென்ற தேசியம் சார்ந்ததல்ல, விவசாயம் சார்ந்தது. வன்னி மக்களுக்கு வாழ்வை அளிக்கும் நீரை அபகரிப்பதும், அதை கிடைக்க விடாது தடுப்பதில் தமிழ்தேசிய செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டு இருக்கின்றது. நீரற்ற வன்னி விவசாயம், இறுதியில் வன்னி மண்ணையே கைவிட்டு வெளியேறுவதில் முடியும். இது உலக வங்கி முன்னெடுக்கும் நவதாராளவாதக் கொள்கை மட்டுமல்ல, தமிழ்தேசியக் கொள்கையும் கூட.

2013-2014 வரட்சியால் வன்னி விவசாயமே அழிந்து விட்டது. முள்ளிவாய்க்காலை மிஞ்சிய வாழ்வியல் அவலங்களை, கண்டுகொள்ள மறுக்கும் அரசியல் வக்கிரமுமே வன்னியில் நடந்தேறுகின்றது. இந்த அவலத்தைப் பயன்படுத்தியும், இரணைமடு குளத்து நீரை யாழ்ப்பாணம் கொண்டு செல்லும் சதியை அரங்கேற்ற முனைகின்றனர். நீரை தனியார் மயமாக்கி பணமாக்கக் கோரும் நவதாராள உலகமயமாக்கல் திட்டத்தின் ஒரு அங்கம் தான், நீரை யாழ்ப்பாணம் கொண்டு செல்லும் அரசியல் சதிராட்டங்கள். இந்த விடையத்தில் இலங்கையின் அனைத்து நவதாராளவாதிகளும், இனம் கடந்து ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

நவதாராள முன்னெடுப்புகளுக்கு மத்தியில் இம்முறை வன்னி விவசாயம் நீர் இன்றி கருகி விட்டது. இதனாலான மக்களின் வாழ்வின் அவலங்களை மூடிமறைக்கின்றனர். இனரீதியாக இலங்கை மக்களில் இருந்து வன்னிமக்களை தனிமைப்படுத்திப் பிரித்தாளும் தமிழ் தேசியவாத நவதாராள அரசியல், வன்னி மக்கள் நிவாரணமின்றி அழிவதை அவசியம் கருதியே இருட்டடிப்புச் செய்கின்றனர். தங்கள் இனவாதத்தை முதன்மைப்படுத்திக் கொண்டு, வன்னியில் எதுவும் நடவாதது போல் நடந்து கொள்கின்றனர். மழை இன்றி தொடர்ந்து பொய்த்துப் போகும் விவசாயத்தை மீட்கும் மாற்றுவழி பற்றிய அக்கறையின்றி, யாழ்ப்பாண மக்களின் நீர், தாகம் பற்றி அக்கறை கொள்வதான வேஷத்தை போடுவதன் மூலம் வன்னி விவசாயிகளின் நீர்த் தேவையை மறுக்கும் வக்கிரத்தை அரங்கேற்றுகின்றனர்.

இந்த நவதாராள தேசிய அரசியல் வக்கிரமானது. உலகளவில் விவசாயத்தினை அழிக்கும் நவதாராள கொள்கையுமாகும். நிலத்தை வாங்கிக் குவிக்கும் மூலதனத்துக்கே, நீரின்றி விவசாயம் அழிவது கொண்டாட்டமாகும். இந்த வகையில் நவதாராள மூலதனத்தை ஆதரிக்கும், தமிழ் தேசியத்துக்கோ மட்டற்ற மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் வண்ணமே, இரணைமடு தண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லும் சதிக்கு, தமிழ் தேசியவாதிகள் தலைமை தாங்குகின்றனர். இதன் மூலம் நீரை தனியார்மயமாக்கி, பணக்கார யாழ்ப்பாணத்துக்கு விற்றுக் காசாக்கும் நவதாராள மூலதனக் கூத்துக்கு, "மாமா" வேலை பார்க்கின்றது தமிழ் தேசியம். இந்த வகையில் விவசாயம் அழிவது அவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.


1.நீர் இன்றியும், இருந்த முதலீட்டை இழந்து நிலத்தை விட்டு விலகும் விவசாயத்தின் அழிவைக் கொண்டாடுவதே மௌனங்கள் மூலம் வெளிப்படுத்தும் மகிழ்ச்சி.

2.இரணைமடு நீரை யாழ்ப்பாணத்து பணக்காரனுக்கு விற்றுக் காசாக்கும் தரகனுக்குரிய மகிழ்ச்சி.

நவதாராள தமிழ்தேசிய இனவாதிகளின் கொள்கைகளுக்கும், இலங்கை அரசின் நவதாராள பொருளாதாரக் கொள்கைக்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை என்பதை, இந்த விடையம் மூலம் இனங்கண்டு கொள்ள முடியும். சிங்கள உழைக்கும் மக்களை எதிரியாக காட்டுகின்றவர்கள் தான், இனவாத அரசின் நவதாராள பொருளாதாரக் கொள்கையை முன்னெடுப்பதில் முன்னிற்கின்றனர். வன்னி விவசாயி விவசாயத்தை கைவிட்டு, நிலத்தை இழப்பதையிட்டு அக்கறையற்றதே தமிழ்தேசியம். இதன் மூலம் நிலம் பாரிய பண்ணையாவதை ஆதரிக்கும் அதேநேரம், நீரைத் தனியார் மயமாக்கி யாழ்பாணத்தானுக்கு விற்க முனைகின்றது.

வரட்சியைப் பயன்படுத்தி, நீரைத் திருடும் சதி

பெரும்போக அறுவடைக்குரிய காலத்தில், அதாவது 15.01.2014 அன்றைய கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் நீர் இருப்பு பற்றிய தகவல்களை வெளியிட்டது. அக்கராயன்குளம் 09,10 அடியும், இரணைமடுக் குளம் 17,06 அடியும், கல்மடுக் குளம் 12,06 அடியும்,



பிரமந்தனாறு குளம் 04,08 அடியும், புதுமுறிப்பு குளம் 08,05 அடியும், கனகாம்பிகைக்குளம் 06,01 அடியும், கரியாலைநாகபடுவான் குளம் 03,05 அடியாகவும் நீர் மட்டம் காணப்படுவதாக கூறியது. இவ்விபரம் வன்னி விவசாயத்தின் பொது அழிவை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகிறது. டங்களிலும் 91 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பெரும்போக விவசாயம் மேற்கொள்ளிக்கப்பட்ட போதும், வரட்சி காரணமாக 64 ஆயிரம் ஹெக்டேரில் மாத்திரமே நெல் பயிரிடப்பட்டது. வரட்சியினால் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக அரைவாசியிலேயே நெல் உற்பத்தியைப் பெற முடிந்தது. அத்துடன் இரணைமடுக் குளத்தின் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சிறுபோகத்துக்கு பதில் 800 ஏக்கரில் மாத்திரமே அனுமதிக்கப்பட்டது. யுத்தத்தை ஒத்த விவசாயிகளின் அவலத்தை, இந்த தகவல்கள் அம்பலமாக்குகின்றது.

இந்த மக்களை அரசியல்ரீதியாக தலைமை தாங்கும் தமிழ்தேசியம் இதைக் கண்டுகொள்ளாமல் மூடிமறைத்ததன் மூலம், இந்தப் பொருளாதார பேரழிவின் முக்கியத்துவத்தை அரசியல்ரீதியாக இல்லாதாக்கியது. முள்ளிவாய்க்காலின் பின்னான பாரிய அழிவை, தங்கள் இனவாத அரசியல் மூலம் மூடிமறைத்தனர். இந்த மக்களுக்கான வாழ்வியல் நிவாரணத்தைக் கூட கோரவில்லை. மாறாக இரணைமடு நீரை யாழ்ப்பாணம் கொண்டுசெல்வது பற்றியும், ஐ.நாவைச் சேர்ந்த சில நாடுகள் சுயநலத்துடன் முன்னெடுத்த மனிவுரிமை விவகாரத்தையுமே முதன்மைப்படுத்தினர். தமிழ்தேசிய நவதாராள மூலதனக் கொள்கை, தனது பாதத்தின் கீழாக வன்னி விவசாயிகளை குழிதோண்டிப் புதைத்தது.

**"இந்த நவதாராள தேசிய அரசியல் வக்கிரமானது. உலகளவில் விவசாயத்தினை அழிக்கும் நவதாராள கொள்கையுமாகும். நிலத்தை வாங்கிக் குவிக்கும் மூலதனத்துக்கே, நீரின்றி விவசாயம் அழிவது கொண்டாட்டமாகும்."**

இலங்கையில் நீர்த்தேக்கத்தில் நான்காவது இடத்தில் இருக்கும் இரணைமடு நீர்த்தேக்கம், நீரை விவசாயத்துக்கு வழங்குவதில் மூன்றாவது இடத்தைக் கொண்டதாகும். 32 அடி நீரை தேக்கக் கூடியதும், வான் பாயும் போது 34 அடி நீரை உள்வாங்கக் கூடியதும், 81 கிலோ மீற்றர் சுற்றளவு கொண்டதே இந்த இரணைமடுக் குளம், தை மாதம் 17.5 அடி நீரைக் கொண்டதாக வற்றி, இன்று 8 அடியாகியுள்ளது. பெரும்போகம் நீரின்றி கருகிவிட்ட நிலையில், சிறுபோகம் முற்றாக வரண்டுவிட்டது. இன்று குடிக்கவே தண்ணீர் கிடையாது. குளத்தில் நீர் இருந்தால் தான் கிணற்றில் நீர் ஊறும்.

அவலமும் துயரமும் கொண்ட மனிதசோகத்தை யாரும் கண்டுகொள்ளாது, அமைதியாக வன்னி விவசாயம் புதைக்கப்படுகின்றது. இனி மீளமுடியாத வண்ணம் கடனோடு, நிலத்தைக் கைவிடுவதை முன்நிபந்தனையாக்குகின்றது. உண்ண உணவில்லை, கூலிக்குக்கூட செல்ல வேலை கிடையாது. நிவாரணம் கூட கிடையாது. விவசாயம் அழிந்ததால்,

**"மகாவலித் திட்டத்தை எதிர்ப்பவர்கள், யாழ் நீர்த்திட்டத்துக்கு காவடி எடுக்கின்றனர்"**

வன்னியில் இருந்து பாரிய புலம் பெயர்வு மௌனமாக நடந்து வருகின்றது. வீட்டுக்கு வீடு கடன் தவணையில் வாங்கிய வாகனங்களை, தவணைப் பணம் கட்டமுடியாத நிலையில் பறித்துச் செல்லப்படுகின்றனர். விவசாயத்தினை அண்டிய அனைத்து தொழில்களும் முடங்கிவிட்டது.

வாழ்வதற்குக் கூட எந்த அரச நிவாரணமும் கிடையாது. அழிந்த பயிருக்கு நஷ்டஈடு கிடையாது. இதை கோரும் நிலையில், அரசியல் கட்சிகளுக்கு சமூக அக்கறை கிடையாது. உழைக்கும் மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளல்ல, தேர்தல் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகள். இனவாதத்துக்கோ, தேசியவாதத்துக்கோ மக்களின் வாழ்க்கை பற்றிய அக்கறையே கிடையாது. இது கடந்தகால வரலாறு மட்டுமல்ல நிகழ்கால எதார்த்தமாகவும் இருக்கின்றது.

விவசாயிக்கு நிரந்தரமாகவே பாடைகட்ட முனையும் தமிழ்தேசியம்

வரண்டுபோன இரணைமடுக் குளத்து நீரை, இனி என்றென்றும் விவசாயிகள் பாவிக்க முடியாத வண்ணம், நீரை வன்னியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லும் திட்டத்தை தமிழ்தேசியம் முன்னெடுக்கின்றது. உலகத்தைக் கொள்ளையடிக்கும் அன்னிய வங்கிகளின் துணையுடன், வன்னிமக்களை சூறையாடும் திட்டமே இது.

வழமையாக வன்னி மக்கள் சிறுபோக விவசாயத்துக்கு நீர் இருக்கும் நிலையில், சிறுபோகத்தில் நிலங்கள் தரிசாகின்றது. ஆனால் தமிழ்தேசியம் நீரை யாழ் மக்களுக்கு எடுத்துச் செல்ல முற்படுகின்றது.

பெரும்போகத்துக்கே நீரின்றி பொய்த்துப்போன விவசாயிகள் குரலற்று ஈனமாகச் செத்துவரும் நிலையில், தமிழ்தேசியமோ வக்கிரம் பிடித்து தங்கள் மாமா வேலையை முன்னெடுக்கின்றது. விவசாயிகள் நிவாரணம் கோரி போராட வேண்டிய நிலையில், இரணைமடு குளத்துக்காக போராடுகின்ற அவலம்.

வன்னி மக்களின் நீர்த் தேவையை பூர்த்திசெய்வதன் மூலம் தான், வடக்கு மக்களுக்கு தேவையான நீரைப் பெற முடியும். இந்த இரண்டையும் ஒருங்கே செய்வதற்கான திட்டத்தை முன்னெடுக்க மறுத்து, இதற்கு எதிராக இனவாதத்தை முன்வைக்கின்றது. இந்த வகையில் ஒருங்கிணைந்த நீர்த்திட்டங்களை எதிர்க்கும் தமிழ் தேசியம், தனித்தனித் திட்டங்களை முன்னெடுக்க கோரும் சதியை முன்வைக்கின்றது.

மகாவலித் திட்டத்தை எதிர்ப்பவர்கள், யாழ் நீர்த்திட்டத்துக்கு காவடி எடுக்கின்றனர்

இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட தேசியவாத வக்கிரமே, வடக்கு நோக்கிய மகாவலித் திட்டத்தை தடுக்கின்றது. நவதாராளவாதத்தை ஆதரிக்கும் தமிழ் தேசிய வக்கிரம் யாழ் நோக்கிய இரணைமடு திட்டத்தை ஆதரிக்கின்றது.

மகாவலித் திட்டம் மூலம் சிங்களக் குடியேற்றம் நடக்கும் என்றும், நீருக்காக "சிங்களவனை" நம்பி "தமிழன்" இருக்க வேண்டுமா என்ற காரணங்களையும் கூறி, வன்னி விவசாயிகளின் அழிவை வரவேற்கின்றனர். இதன் மூலம் வன்னி மக்களை விவசாயத்தில் இருந்து அகற்றிவிடுவதும், பெரும் மூலதனங்களுக்கு நிலங்கள் சொந்தமாக்குவதை தமிழ்தேசியம் எதிர்ப்பதில்லை. அரசின் இனவாதத்துக்கு எதிராக சிங்கள மக்களுடன் இணைந்து போராட மறுக்கின்றவர்கள், அதே இன வக்கிரத்துடன் இன குடியேற்றம் பற்றியும்

# டவிரலைக்

# !

சிங்கள மக்களை நம்பி வாழ்வதா என்றும் கேட்கின்றனர்.

வன்னியில் நீர் இன்றி விவசாயம் அழிந்து வரும் நிலையில், விவசாய முதலீடுகளும் அழிந்துள்ளது. நிலம் படிப்படியாக பாரிய பண்ணைகளாக, மூலதனத்தின் கைகளில் சென்றடையவுள்ளது. இனக் குடியேற்றம் நடக்கும் என்று கூறியும், "சிங்களவன்" நீரை நம்பி "தமிழன்" வாழ்வதா என்று கேட்டு, வடக்கு நோக்கிய மகாவலித் திட்டத்தை எதிர்க்கின்றது தமிழ்தேசியம். ஆனால் நீரின்றி, வன்னி நிலத்தை பாரிய மூலதனத்திடம் இழப்பதை எதிர்ப்பதில்லை. அதை வரவேற்கின்ற மாமா வேலையையே இனவாதம் மூலம் செய்கின்றது. உழைக்கும் சிங்கள - தமிழ் மக்களுக்கல்ல நிலம், பாரிய மூலதனத்துக்கே நிலம் என்பதே தமிழ்தேசிய பொருளாதார நவதாராள கொள்கையாகும்.

இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நீரை வழங்குவதும், வன்னியில் சிறு விவசாயத்தை அழித்து பண்ணைகளை உருவாக்குவதற்கே, தமிழ் தேசியம் உதவுகின்றது. பண்ணைகளுக்கு தேவையான மகாவலி நீரை கொண்டுவரும் போது, அது சிங்கள குடியேற்றத்துக்கு அல்ல என்று கூறி அதை ஆதரிப்பதும், அதேநேரம் அபிவிருத்தி என்று தமிழ் மக்களுக்கு விளக்கம் கொடுக்கும் அடிப்படையில்தான் இரணைமடு நீரைப் பற்றிய முடிவுகள் எடுக்கப்படுகின்றது.

தமிழ்தேசியம் தனது சொந்த விவசாயிகளை பாதுகாக்கும் அடிப்படையில், தனது பொருளாதார கொள்கையை கொண்டு இருப்பதில்லை. நவதாராள கொள்கையைக் கொண்டதும், சிங்கள உழைக்கும் மக்களை எதிரியாகவும் முன்னிறுத்தியதே தமிழ்தேசிய பொருளாதாரக் கொள்கை. உழைக்கும் தமிழ் மக்களை முன்னிறுத்தியதல்ல, தமிழ் தேசிய இனக் கொள்கை.

தமிழ்-சிங்கள உழைக்கும் மக்களைப் பிரித்து வைப்பதன் மூலம் நன்மை அடைவது நவதாராள மூலதனமும், அது சார்ந்து செயற்படுகின்ற அரசியல் "மாமாக்களும்" தான். இதுதான் இன்று இலங்கையில் முன்வைக்கும் இனத் "தேசியமாக" இருக்கின்றது.

இலங்கை தழுவிய நீர்க் கொள்கையே நீர்த் தேவையைப் பூர்த்திசெய்யும்

மகாவலியுடன் இரணைமடுக் குளத்தை இணைப்பதன் மூலமே, வன்னி விவசாயிகளின் விவசாயம் செழிக்கும். அடிக்கடி மழை இன்றி விவசாயம் பொய்த்துப் போவதில் இருந்து, விவசாயியின் வாழ்க்கையை பாதுகாக்கும். அதை மேலும் செழிக்கும் வண்ணம், சிறுபோகத்தில் முழுமையான நிலப்பயன்பாட்டுக்கும் மகாவலி நீர் உதவும். இரணைமடுவுடன் மகாவலி இணைக்கப்பட்டாக வேண்டும். விவசாயிகளின் வாழ்க்கை பற்றிய அக்கறை உள்ளவர்களுக்கு, நீர்ப் பயன்பாடு பற்றிய தெளிவு இன்று அவசியமானது.

இன்று இலங்கையில் மொத்தமாக 103 ஆற்று வடிநிலங்கள் இனங்காணப்பட்டுள்ளது. இந்த வகையில் வட மாகாணத்தில் இனம் காணப்பட்ட மிகப் பெரிய ஆற்று வடிநிலமே கனகராயன் வடிநிலமாகும். இது 90 கிலோமீற்றர் நீளமானதும் 906 சதுர கிலோமீற்றர் நீரேந்து பரப்பையும் கொண்டது. கனகராயன் ஆற்றுவடிநிலம் 90 மீற்றர் உயரத்திலான சேமமடுக் குளத்தில் உற்பத்தியாகின்றது. மென்சாய்வினை உடைய வடக்கு நோக்கிய சமவெளி ஊடாகப் பாய்ந்து, 30 மீற்றர் உயரமான இரணைமடு நீர்த்தேக்கத்தினுள் நீரினைச் செலுத்துகின்றது. இந்த நீர் நூற்றுக்கும் மேற்பட்ட குளங்களில் தேக்கப்பட்டு, சிறு சிறு கிளையாறுகள் ஊடாகவே கனகராயன் ஆற்றினுள் சேர்க்கப்படுகின்றது.

இரணைமடு ஊடாக செல்லும் நீர் இறுதியில் 3 மீற்றரிலும் குறைந்த உயரமுடைய ஆனையிறவுக்கு கிழக்கு அண்டிய தட்டுவன்கொட்டி ஊரியான் பகுதி கடல்நீர் ஏரிக்கு வந்தடைகின்றது. இதன்மூலம் வருடம் ஒன்றிற்கு சராசரி 24 மில்லியன் கனமீற்றர் நீர் வெளியே செல்வதாக மதிப்பிடப்படுகின்றது.

30 மீற்றர் கடல் உயரத்தில் உள்ள இரணைமடு நீர்த்தேக்கம் நீர் 30,480 மீற்றர் நீளமுடைய பிரதான கால்வாய்கள், 13,860 மீற்றர் நீளமுடைய கிளை வாய்க்கால்கள், 156,540 மீற்றர் நீளமுடைய வயல் வாய்க்கால்கள் என்பவற்றின் மூலம் பாசனம் செய்யப்படுகின்றது.

227 சதுரமைல்கள் நீரேந்து பரப்புக்கொண்ட இரணைமடுக் குளம், 9 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. இதன் அணை 2 கிலோ மீற்றர் நீளமுடையது. இயற்கையான இரணைமடு நீர்த்தேக்கத்தின் விரிவாக்கப் பணிகள் 1902 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1920 இல் முடிக்கப்பட்டது. 22 அடிக்கு நீர் உயர்த்தப்பட்டதன் மூலம், கடல் மட்டத்திலிருந்து 26.7 மீற்றர் உயரத்தில் 40,000 ஏக்கர் அடி நீரைத் தேக்கக்கூடியதாக மாறியது. இரண்டாவது தடவையாக 1951இல் மீண்டும் 28 அடியாக உயர்த்தப்பட்டு நீர்க்கொள்ளளவு 71,000 ஏக்கர் அடி ஆக்கப்பட்டது. 1954இல் மூன்றாவது தடவை 30 அடியாக உயர்த்தப்பட்டு நீர்க்கொள்ளளவு 82,000 ஏக்கரடியாக்கப்பட்டது. 1977ஆம் ஆண்டு மீண்டும் நான்காவது தடவையாக 32 அடியாக உயர்த்தப்பட்டு நீர்க்கொள்ளளவு 106,500 ஏக்கர் அடியாக மாற்றப்பட்டது.

இன்று இதில் இருந்து 13 ஆயிரத்து 500 ஏக்கர் அடி குடிநீரை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல முற்படுகின்றனர். இதை நடைமுறைப்படுத்த நீர் மட்டத்தை 36 அடியாக உயர்த்துவதன் மூலம் 119.000 ஏக்கர் அடியாக மாற்ற முடியும் என்கின்றனர். 400 ஏக்கருக்கு மேலதிகமாக நீரை வழங்கமுடியும் என்று கூறுகின்றனர்.

ஆக நீரை 4 அடி உயர்த்துவதன் மூலம் யாழ்ப்பாணத்துக்கு நீர் என்ற மாயாஜாலக் கதைகள் ஒருபுறம் இருக்க, 4 அடி உயர்த்துவது நடைமுறைக்கு வந்தால் மிகப்பெரியளவில் வன்னி நிலம் நீரில் புதைந்து போகும். இதனாலான சுற்றுச் சூழல் பாதிப்பு தொடங்கி மழையற்ற காலத்தில் இத்திட்டத்தின் படுதோல்வி, பாரிய, சமூக பொருளாதார எதிர்விளைவுகளைக் கொண்டதாகவே இருக்கும்.

இதற்கு மாற்று வழி 300 கிலோமீற்றர் நீளமானதும் இலங்கையின் மிக நீண்டதுமான மகாவலி கங்கை நீரப்படுகையில் இருந்து நீரைப் பெறுவது தான். இன்று மகாவலி கங்கை இலங்கை நிலப்பரப்பில் பதினாறில் ஒரு பங்குக்கு நீரைப் பாய்ச்சுகின்றது. கண்டியில் உற்பத்தியாகி வடபகுதி நோக்கி பாய்ந்து, இறுதியில் திருகோணமலைக் கடலை சென்று அடைகின்றது.

மகாவலி திட்டத்தின் கீழ் இன்று அடையாளம் காணப்பட்டுள்ள 13 திட்டங்கள் நடைமுறைப்படுத்தினால், புதிதாக 365,000 ஹெக்டர் விவசாய நிலத்துக்கு நீர் கிடைக்கும். இந்த வகையில் மொரகஹகந்த நீர்த்தேகத்தில் இருந்து இரணைமடுவிற்கும் நீரைக் கொண்டு செல்ல முடியும். 160 கிலோமீற்றர் நீளம் கொண்ட வாய்க்கால் அமைப்பதன் மூலம் சாத்தியமானது. இதன் மூலம் இரணைமடுக் குளத்து நீரை உயர்த்தாது, நீரைத் தொடர்ந்து பாய்ச்ச முடியும். யாழ்ப்பாணத்துக்கான நீரையும் பெறமுடியும்.

எஞ்சிய மற்றும் கடலில் கலக்கும் நீரைத் தேக்கிப் பாதுகாக்கும் வண்ணம், ஆனையிறவு கடல் நீர் ஏரியில் இருந்து கடல்நீரை வெளியேற்றி நீரைச் சேகரிக்க முடியும். இந்த வகையில் சுண்டிக்குளம், தொண்டைமானாறு மற்றும் நாவற்குழி ஆகிய இடங்களில் மூன்று தடுப்பணைகள் கட்டுவதன் மூலம், இரணைமடு ஊடான மேலதிக நீரையும், மகாவலி நீரையும் பாரியளவில் தேக்கி பாதுகாக்க முடியும். அத்துடன் யாழ்குடா செழிக்கும். கடல்நீர் ஏரியை அண்டிய வரண்ட பூமி வளம் கொண்டதாக மாறும். எதிர்காலத்தில் நீர் உற்பத்தியாகும் இடத்தில் ஏற்படும் வரட்சிக்கு, நீர் சேமிப்பில் இருந்து மீள நீரைக் கொடுக்க முடியும்.

தமிழ் இனவாதிகள் இருக்கும் வரை "தமிழன்" குடிக்க நீரின்றி தவிப்பது, விவசாயமுமின்றி அழிவதுமே தேசியவாதமாக இருக்கும். இனவாதிகளுக்கு எதிராக தமிழ்-சிங்கள உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து வாழ்வதும், போராடுவதுமே மகிழ்ச்சியான வாழ்வுக்கான வழியைக் காட்டும்.



தாதிகளுக்கு பிரசவகூட பயிற்சி வழஙகுவதனால் தமது தொழில் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகவும் அதனால் குடும்ப சுகாதார ஊழயர்கள் தமக்கும் அந்தப் பயிற்சி பெற உரிமை இருப்பதாகக் கூறி போராட்டத்தில் குதித்ததினால், கடந்த மாதம் கொந்தளிப்பான ஒரு நிலை காணப்பட்டது. வேலை நிறுத்தம் காரணமாக அரச மருத்துவ மனைகள் பல செயலிழந்து காணப்பட்டன. தமக்கு சிகிச்சையளிக்குமாறு வற்புறுத்தி சிறுநீரக செயலிழப்பு நோய் தாக்கத்திற்கு உள்ளாகி அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளும் பாதையை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தமையை காணக்கூடியதாக இருந்தது. தற்போது ஓரளவு பின்வாங்கப்பட்டு வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. தொலைக்காட்சிகளில் தோன்றிய இரு பக்கத்தினதும் தொழிற்சங்கங்கள் ஒருவரையொருவர் விமர்சித்து பேசுவதை காண முடிந்தது. நாய்ச் சண்டையை பார்த்து ரசிகர்கள் திருப்தியடைந்ததோடு, கலரியை மகிழ்வித்து பிரபலமடைவதனால் ஊடகங்களும் திருப்தியடைந்தன. ஆனால் தனியார் நிறுவனங்களும் பயிற்சி நிலையங்களும் உருவாகியிருக்கும் நிலையில் அது சார்ந்த அரச நிறுவனங்கள் செயலிழந்து வருகின்றன. சுகாதாரச் சேவையில் முக்கியமாகப்படுவது நோய் வராமல் தடுப்பதாகும். சமூக சுகாதார சேவை என்ற பெயரில் மாவட்ட வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரீட்சகர், குடும்ப சுகாதார ஊழியர் ஆகிய சேவைகளைக் கொண்ட வலைப்பின்னலை நடத்தியது அதற்காகத்தான். தொன்றுதொட்டு நிலைத்திருந்த மக்கள் சுகாதார சேவைக்கு நவ தாராளமய கொள்கையின் கீழ் மாற்றாந்னதாய் கவனிப்பே கிடைத்திருக்கிறது. அதற்கான ஒதுக்கீடுகள் வருடாவருடம் குறைக்கப்படுவதோடு, சமூக சுகாதார சேவையும் சீரழிந்து வருகிறது. அதனால் ஏற்படும் வெற்றிடத்தை தனியார் துறையால் நிரப்பும் திட்டமும் இருக்கிறது. இலங்கை சுகாதாரச் சேவையின் உண்மை நிலை இதுதான். இந்த துறையைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள் இந்த பிரச்சினைக்காக போராடுவதில்லை. போராடினாலும் வெற்றியடைவதில்லை. குடும்ப வசதிகள் சம்பந்தமாக உலக சுகாதார அமைப்பின் மதிப்பீடு கிடைத்திருக்கிறது. அந்த மதிப்பீட்டின் பின்னர் வழங்கப்பட்ட ஆலோசனையின்படி, பிரசவகூடத்தில் பணியாற்றுவோருக்கு மாதாந்தம் 1000 ரூபா கொடுப்பனவு வழங்க தீர்மானிக்கப்பட்டது. பிரசவ கூடத்தில் பணியாற்றுவோருக்கே இக்கொடுப்பனவு கிடைக்கிறது. (ஆனால், பிரசவ கூடத்தில் பணியாற்றுவோரின் விகிதம் குறைவாக இருப்பதுடன், அதிகமானோர் பிரதேச மட்டத்திலேயே பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு சுகாதார பணியாளரனிதும் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படாமை, மேலதிக நேர வேலையில் வெட்டு போன்ற பிரச்சினைகள் தாதியர்களுக்கு இருக்கின்றன. பிரசவகூட பயிற்சிக்காக தாதியர் போராடுவது பிரசவகூட பணிக்கு கிடைக்கும் 1000 ரூபா கொடுப்பனவுக்காகத்தான். தவிரவும் தாதியர் சேவைக்கான பயிற்சிப் பாடத்திட்டங்கள் வளர்ச்சியடையாத நிலையும் உள்ளது. பிரசவகூட பயிற்சி மட்டுமல்ல, தாதியர் சேவைக்கான பல துறைகளில் பயிற்சிப் பாடத்திட்டங்களிலும் வளர்ச்சி காணப்படவில்லை. தாதியர் கல்வியை தரமானதாக ஆக்கிக் கொள்வதற்காகவே தாதியர் போராட வேண்டும். அதற்குப் பதிலாக பிரசவகூட பயிற்சிக்காக மட்டும் போராடுவது கொடுப்பனவிற்காகவே அல்லாது தாதியர் கல்வியை விரிவாக்கும் பிரச்சினைக்காக அல்ல.

தாதியர் சேவையில் போன்றே குடும்ப சுகாதார சேவையிலும்



# பிரசவகூட பயிற்சியில் குழப்பம்

இந்த சம்பவத்தின் பின்னணியில் இருக்கும் உண்மை கதை என்ன? உண்மையான அரசியல் என்ன? போன்ற பிரச்சினைகளை அவதானிக்க வேண்டும்.

இவை தொழிலாளர் போராட்டங்கள் அல்லவென்பதை முதலில் கூற வேண்டும். தொழிற்சங்கத் தலைவர்கள் தமது இருப்பிற்காக தொழிலாளர்களை பிளவுபடுத்தி, தரம் பிரித்து ஒற்றுமையை குலைக்கும் ஒன்றுக்கும் உதவாத நாடகம்தான் இது. இதன்போது இரு கோஷங்கள் இருபக்கத்திலிருந்தும் ஒலித்தன. ஒன்று குடும்ப சுகாதார ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினையாகும். இரண்டாவது, தாதியர் சேவைக்கு முறையான சுகாதார கல்வி பெற்றுக் கொடுப்பது சம்பந்தமான பிரச்சினை. இவை இரண்டுமே உண்மையான பிரச்சினைகளாக இருக்கின்றது. அவற்றின் மூலவேர் எது?

இலங்கையில் சுகாதார சேவை பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. முதலாவது,சுகாதார சேவையின் பல்வேறு துறைகள் சார்ந்து தனியார் நிறுவனங்கள் உருவாகி சுகாதார சேவை விற்பனை பண்டமாக ஆக்கப்பட்டுள்ளமையாகும். இரசாயண கூடங்கள், மருந்தகங்கள், வைத்தியசாலைகள் ஆகியன தனியார் துறையினரால் நடாத்தப்படுவதை இன்று சர்வசாதாரணமாக காண முடியும். இதற்கிடையில் சுகாதார சேவை தொழில் சார்ந்த பயிற்சி வழங்கும் சுகாதாரக் கல்வியும் தனியார்மயமாகியுள்ளது. சுகாதாரக் கல்வியின் அனைத்து பாடங்களுக்கும்





# உண்மைக் கதை

சுகாதார ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு இல்லாமலாவதற்கு காரணம் தாதியர்களுக்கு பிரசவ கூட பயிற்சியளிப்பதல்ல, சமூக சுகாதார சேவையை வெட்டும் ஆட்சியாளர்களின் திட்டம்தான் காரணம். தாதியர்களுக்கு பிரசவகூட பயிற்சி உள்ளிட்ட சுகாதாரக் கல்வி பெற தடையாக இருப்பது குடும்ப சுகாதார ஊழியர்கள் அல்ல. சுகாதார கல்வி மற்றும் பயிற்சி பாடத்திட்டங்களை தனியாரிடம் ஒப்படைக்கும் ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் தான் காரணம். அரசாங்கம் உண்மையான பிரச்சினைகளை மறைக்கவும், குடும்ப சுகாதார ஊழியர்களுக்கிடையில் குடுமிப்பிடி சண்டையை மூட்டிவிடவும் அதனூடாக சுகாதாரச் சேவையின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கையை சிதைத்து நோயாளர்களை தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற தூண்டப்படுகின்றனர். தாதியர்கள் சார்பில் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய முருத்தொட்டுவே ஆனந்த தேரரும், குடும்ப சுகாதார ஊழியர்கள் சார்பில் போராட்டத்தில் குதித்த தேவிகாவும் அரசாங்கத்தின் பகடைக்காய்களாக இருந்தமை இதற்கு சிறந்த உதாரணமாகும். இருவரும் அலரி மாளிகையிலிருந்து அறிக்கைகளை விடுவதோடு, அடிமட்ட தாதியர்களையும், குடும்ப சுகாதார ஊழியர்களையும் நாய்ச் சண்டையில் இழுத்து விட்டுள்ளனர்.

இலங்கையில் குழந்தைகள் பிறக்கும்போதே இறப்பு விகிதம் 1000:28க இருக்கின்றது. இலங்கையில் குழந்தை பிரசவிப்பதில் சுகாதார தொழிற்சங்கங்கள் செய்தது தமது இருப்பிற்காக தர பேதத்தை தூண்டியதுதான். தோழிலாளர்களை ஒருவருக்கொருவர் மோத விட்டு அதனூடாக நோயாளிகளை இக்கட்டான நிலைக்கு தள்ளி தனியார் துறையின் பக்கம் தள்ளியமைதான். இங்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பாத்திரம் குறித்தும் பேச வேண்டியுள்ளது. தாதியர்களுக்கு எதிராக குடும்ப சுகாதாரப் பணியாளர்களை தூண்டிவிடும் கீழ்த்தரமான வேலையிலும் சங்கத்தின் சில உறுப்பினர்கள் செயற்பட்டனர். சுகாதார நிர்வாக சேவையிலுள்ள மருத்துவர்களின் தற்போதைய ஏகபோகத்தை நடாத்திச் செல்லும் தேவை அவர்களுக்கு இருக்கின்றது. சுகாதார நிர்வாக சேவையில் நுழைவதற்கு சிறப்பு பட்டப்படிப்பு தேவை. இணை சுகாதார பாடத்திட்டம் 4 வருடங்களாகும் பட்சத்தில் தாதியர்களும் அதில் நுழைய முடியும். அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கம் செய்வது என்னவெனில், சுகாதாரச் சேவையின் ஏனைய அனைத்து சேவைகளின் உயர் கல்வி வாய்ப்பை வெட்ட சதி செய்வதுதான். இணை சுகாதார மாணவர்களின் பிரச்சினைக்கும், தாதியர்-குடும்ப சுகாதார சேவையாளர்களின் மோதலுக்கும் இது குறிப்பிட்டளவு பங்களிப்பை செய்தது. அரச மருத்துவர்களின் சங்கம் கோத்திரவாதத்தை போஷித்தது மட்டுமல்ல, தாதியர்களின் தொழில்சார் போராட்டத்தை அடக்குவதற்கும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் அடிவருடித்தனத்தை செய்தது. போராட்டம் சரியாக இருந்தாலும்,

15 ஆம் பக்கம் பார்க்க...

# கசினோவை வைத்து சூதாடும் விமல் வீரவன்சவும் அரசும்

"அரசு கசினோ சூதாட்ட மையம் தொடர்பான பிரச்சினைக்கு அரசாங்கம் என்ற ரீதியில் அனைத்து தரப்பினரும் பொறுப்பு சொல்ல வேண்டுமெனவும் தனிப்பட்ட ரீதியில் எவரையும் குற்றம் சுமத்த முடியாது" என்கின்றார் மந்திரி விமல் வீரவன்ச. அரசு என்ற வகையிலும், அரசின் மந்திரி என்ற வகையிலும், நாட்டின் எந்தப் பிரச்சனைக்குத்தான் இவர்கள் அனைவரும் பொறுப்புக் கூறி இருக்கின்றனர்?

விமல் வீரவன்சவிற்கு அரசியலே சூதாட்டம் தான். வர்க்கப் போராட்டத்தை முன்வைத்த ஜே.வி.பியில் இருந்த போது, இனவாதத்தை கக்கியதுடன் வர்க்கப் போராட்டத்தை ஒடுக்கிய அரசாங்கத்தை ஆதரிக்கும் அரசியல் சூதாட்டத்தை நடத்தியதுடன், சொத்துக்காக பதவிக்குமாக அரசியல் குத்துக்கரணம் அடித்தவர் தான் வீரவன்ச. இன்று தன் அரசியல் வழியில், தன் அரசாங்கமே சூதாட்ட மையம் அமைப்பதைக் கண்டு கொதித்துப் போகின்றார்.

அவரைப் பொறுத்தவரை அரசியல் சூதாட்டத்தை ஆதரிக்கலாம், பொருளாதார சூதாட்டத்தை அனுமதிக்க முடியாது என்பதும், நவதாராள பொருளாதாரம் நாட்டை சூறையாடுவது பிரச்சனையல்ல, கடை திறந்து சூதாட்டம் நடத்துவது தான் பிரச்சனை என்கின்றார். வேடிக்கையான அரசியல் சூதாட்டம் நடத்தும் கோமாளி போர்வழி.

கசினோ சூதாட்டம் இலங்கை "கலாச்சாரத்திற்கும் பொருளாதாரத்திற்கும்" சவாலாக உள்ளதாக புலம்புகின்றார். இவர் புலம்பும் கலாச்சாரமான பௌத்த சிங்கள கொய்கம சாதிய மேலாதிக்கமாகவும், பொருளாதாரம் என்பது நவதாராளவாத முதலாளித்துவ சுரண்டலையும் முன்னிறுத்துகின்றது. இவரின் கொள்கை மட்டுமல்ல, இவரின் அரசாங்கத்தின் கொள்கையும் இதுதான். இதை முன்னிறுத்தியே கசினோ சூதாட்ட மையத்தை எதிர்க்கின்றனரே ஒழிய, இலங்கையின் உழைத்து வாழும் மக்களின் பொருளாதாரத்தையோ, உழைத்து வாழும் கலாச்சாரத்தையோ உயர்த்தி அல்ல.

விடுகின்றது. குடும்பம் சார்ந்து எழக்கூடிய இணக்கமான ஆண் பெண் நுகர்வாக்க தன்மையை அழித்து, தனிமனிதனை முன்னிலைப்படுத்தி வக்கிரமடைகின்றது. இங்கு நுகர்வு முதன்மை பெற்று, இணக்கமான பாலியல் நடத்தையை அவசியமற்றதாக்குகின்றது. இந்த வகையில் தனிவுடமை சார்ந்த பாலியல் வெறும் நுகர்வாக குறுகிவிடுகின்றது. சமூகம் சார்ந்த பாலியல் கூறுகளை அழித்துவருகின்றது.

இப்படி குடும்ப வடிவங்களை அழித்து குடும்பத்திலிருந்து ஆணை சுதந்திரமான நுகர்வாக்கம் கொண்டவனாக விடுவிக்கப்படுவதே பெண் விடுதலை என்றால், ஆணை சமூகக் கடமை மற்றும் சமூகப் பொறுப்பில் இருந்து நீக்கிவிடுவதாகும். அதாவது குழந்தை பராமரிக்கின்றதும், குடும்பத்துக்காக உழைக்கின்றதுமான சமூகக் கடமைகளை ஆணுக்கு இல்லாதாக்கிவிடுகின்றது. ஆண் நுகர்வதன் மூலமாக, பெண் குழந்தையைச் சுமக்கின்றாள். அதையிட்டு ஆண் அக்கறைப்பட வேண்டியது கிடையாது. இது தான் தனிவுடமையிலான ஆணாதிக்க "சுதந்திரமாகும்".

இங்கு ஆணை முற்றாக தனியுடமைக் கண்ணோட்டம் பெற்றவனாக மாற்றிவிடுகின்றது. சமூகப் பொறுப்பில் இருந்து விடுபட்ட, "சுதந்திர" மனிதனாகப்படுகின்றான். இதற்கு மாறாக பெண்ணே குழந்தையைப் பராமரிக்கவும், குடும்பத்திற்காக தனித்து உழைக்கும் சுமையை சுமத்தியும் விடுகின்றது. ஆணின் சுதந்திரமான பாலியல் நடத்தைக்கு, உட்பட்டே, பெண் இயற்கையான பாலியல் தேவையைப் பூர்த்தி செய்து வாழ வேண்டியிருக்கின்றது. இங்கு குழந்தையை சமூகமே பராமரிக்காத வரை, ஆணின் சமூகப் பொறுப்பற்ற "சுதந்திரம்" தனியுடமை அமைப்பின் வக்கிரமான நுகர்வாக வெளிப்படுகின்றது.

இந்த நிலையில் பொருளாதார ரீதியாக பெண் ஆணுக்கு நிகரான சம கூலியைப் போராடிப் பெற்றாலும், குழந்தை சார்ந்து பெண்ணின் சமூகக் கடமையை இயற்கை மாற்றிவிடுவதில்லை. ஆண் இல்லாத பெண்ணின் குடும்பமாகவே தொடர்ந்து குடும்பம் நீடிக்கும். ஒரு ஆணுக்கு நிகராக பெண் சம கூலியை பெற்றாலும், தனியுடமை சமூக அமைப்பிலான ஆணின் நுகர்வாக்கத்தை பெண் சார்ந்த குடும்பம் எட்ட முடியாது. இந்த உண்மையை எவரும் மறுதளிக்க முடியாது. பெண் ஆணுக்கு நிகரான கூலியைக் கோருவதன் மூலம், ஏற்றத்தாழ்வான நுகர்வைக் கடக்க முடியாது. குழந்தையைப் பராமரிக்கின்ற பொறுப்பை சமூகம் ஏற்க வேண்டும். இது தனியுடமைச் சமூக அமைப்பு முறைக்கு முரணானது. ஆணுக்கும் குழந்தையைப் பராமரிக்கும் சமூகக் கடமை உண்டு என்பதை, தனியுடமை அமைப்பில் குடும்பத்துக்கு வெளியில் உருவாக்க முடியாது. அதேநேரம் சமூகத்தன்மை கொண்ட எந்தச் சமூகக் கூறுகளும், தனியுடமை முறைக்கே முரணானது.

தனியுடமை அமைப்பில் தனிமனித சுதந்திரம் என்பது, சமூகக் கூறுக்கு முரணானதாகவே என்றும் இயங்குகின்றது. இதை இன்னுமொரு வகையில் விளக்குவதானால், உலகமயமாக்கம் அரசுகளின் மக்கள் நலத் திட்டங்களை ஒழித்துக் கட்டுவது போல், ஆணின் சமூகத் தன்மையை நுகர்வாக்கம் அழித்தொழிக்கின்றது. இந்த வகையில் அரசுகளின் இன்றைய நிலைக்கு, ஆண் வந்தடைகின்றான். ஆண் போல் அரசுகள் கூட சமூகத் தன்மையை இழந்து வருகின்றது.

உலகமயமாதலில் அரசுகள் என்பது, வெறும் ஒடுக்குமுறைக் கருவிகளாக மாறி வருகின்றது. தேசிய உற்பத்தி மற்றும் மக்கள் நலன் சார்ந்த சமூகத் திட்டங்கள், அரசின் கடந்தகால செயற்பாட்டில் இருந்து இல்லாதாகி வருகின்றது. அனைவருக்குமான இலவசக் கல்வி, இலவச மருத்துவம், பொதுப் போக்குவரத்துத் தொடங்கி சமூக நலத்திட்டங்கள் வரையான பல்வேறு கடந்தகால சமூகம் சார்ந்த அரசு செயற்பாடுகள் அனைத்தும், இன்று கைவிடப்பட்டு வருகின்றது. அரசாக எஞ்சுவது அடக்குமுறை இயந்திரம் மட்டும் தான். கடந்த காலத்தில் அனைத்து வர்க்கங்களையும் திருப்தி செய்யும் அரசாக முன்னிறுத்தும் வகையில், அரசின் சமுதாயச் செயற்பாடுகளில் இருந்து அரசை மூலதனம் விடுவிக்கின்றது. மூலதனத்தைக் குவிக்கும் அதன் நலனை முதன்மைப்படுத்தி, அதை பாதுகாக்கும் அடக்குமுறை இயந்திரமாகவே அரசு குறுகி வருகின்றது. இது போல் தான் ஆணும். குடும்பத்திற்காக தனது உழைப்பில் இருந்து வழங்கிய சமூக உள்ளடக்கத்தை, இன்று சுதந்திரமான நுகர்வாக்கம் இல்லாதாக்குகின்றது. பாலியல் உட்பட அனைத்தையும் சமூகத் தன்மையற்ற வகையில் சுதந்திரமாக நுகர்பவனே ஆண் என்ற நிலைக்கு, ஆணாதிக்கத்தை மாற்றிவிடுகின்றது. பெண் இந்த நிலையை எதிர்மறையில் அடையவே முடியாது.

இதனால் மற்றொரு உண்மை வெளிப்படையானதாகின்றது. முன்பு குடும்பங்கள் ஆணின் கூலி சார்ந்து பராமரிக்கப்பட்ட போது தேவைப்பட்ட குறைந்தபட்ச கூலியை, மூலதனம் இனி ஆணுக்கு கொடுக்கவேண்டியதில்லை. ஆணின் தனி பராமரிப்புக்கு மட்டுமான கூலி போதுமானது. இதுதான் மூலதனத்தின் கொள்கை. வாழ்க்கைச் செலவு அதிகரிப்புடன் கூடிய கூலிக் குறைப்பாக, இன்று இவை அமுலுக்கு வருகின்றது. குடும்பத்தில் இருந்து ஆணைப் பிரிப்பதன் மூலம் சுதந்திரமான அதீதமான நுகர்வையும், அதே நேரம் பொதுவான கூலிக் குறைப்பையும் மூலதனத்தால் செய்ய முடிகின்றது. குடும்பத்தில் இருந்து ஆணை விலக்கும் மூலதனம், ஆணின் கூலி விகிதத்தையும் குறைத்து வருகின்றது. இதனால் குடும்பத்தை பராமரிக்கும் பெண்ணின் கூலிக்கு நிகராக ஆணின் கூலி குறைந்து வருவதுடன், அனைவருக்குமான கூலியும் பொதுவாக குறைந்து வருகின்றது. ஆணின் கூலியை குறைப்பதன் மூலம், மூலதனம் சம கூலியை வழங்கும் பெண்ணிய வேஷத்தை தனக்கு போட முனைகின்றது. இதன் மூலம் மூலதனத்துக்கு எதிரான பெண்ணிய கூலிப் போராட்டத்தை அகற்றமுனைகின்றது.

மறுபக்கத்தில் ஆணின் கூலிக் குறைப்பு மூலம், பொதுவான கூலிக் குறைப்பை மூலதனம் செய்கின்றது. இந்த பொது விளைவால் பெண் தன்னையும் தன் குடும்பத்தையும் பராமரிக்க முடியாத நிலைக்கு கீழே தள்ளப்படுகின்றாள். முன்பு ஆணுடன் இணைந்த குடும்பத்தின் பொருளாதார அடிப்படைகளுக்குப் பதில், பெண் மட்டும் கொண்ட குடும்பத்தின் பொருளாதாரம் சமூக வறுமையை உருவாக்குகின்றது.

மறுபக்கத்தில் ஆணின் சுதந்திரமான நுகர்வாக்கமே பாலியல் நடத்தையைத் தீர்மானிப்பதால், ஆணின் உழைப்பு சார்ந்த சுதந்திரமான பணம் தான் அதை முடிவு செய்கின்றது. ஆண் பணத்தைக் கொண்டு பெண்ணை நுகர்வது என்பதே, தீர்மானகரமான தன்மையாக இருக்கின்றது. பெண் குடும்பத்தை தனித்து பராமரிக்க முடியாத பொருளாதார நெருக்கடியை, இந்த நுகர்வுப் பணம் பயன்படுத்தி விடும் போது, "சுதந்திரமான" சந்தை அடிப்படையிலான நுகர்வு விபச்சாரத்தை இறுதியில் உருவாக்குகின்றது. தனிவுடமையிலான தனிமனித "சுதந்திரமும்" நுகர்வைத் தீர்மானிக்கும் பணமும் இணைந்து, பாலியல் நடத்தையை தீர்மானிக்கின்றது. இதன் விளைவு சமூகத் தன்மையற்ற வக்கிரமடைந்த ஆணாதிக்க நுகர்வாக்க சமூகத்தை உருவாக்கி, திருப்தியற்ற மகிழ்ச்சியற்ற நிம்மதியற்ற ஆதரவற்ற வாழ்வைத் தந்திருக்கின்றது.

தொடரும்

7. அனுராதபுரம்-மன்னார் அதிவேகப் பாதை
8. கொழும்பு-திருகோணமலை அதிவேகப் பாதை
9. கொழும்பு வெளி சுற்றுவட்ட அதிவேகப் பாதை

2003 ஐதேக அரசாங்கத்தின் உத்தேச அதிவேகப் பாதைகள்

1. கொழும்பு-மாத்தறை அதிவேகப் பாதை
2. மாத்தறை-ஹம்பாந்தோட்டை அதிவேகப் பாதை
3. கொழும்பு-கண்டி அதிவேகப் பாதை
4. ஹம்பாந்தோட்டை-மட்டக்களப்பு-தமிருகொணமலை அதிவேகப் பாதை
5. நீர்கொழும்பு-மன்னார் அதிவேகப் பாதை
6. கொழும்பு-யாழ்ப்பாண அதிவேகப் பாதை
7. கொழும்ப-திருகோணமலை அதிவேகப் பாதை

வஉனஅ றனமுயளஙகத றமுளகதளஎள ரனசய. ஐதேக அரசாங்கத்தின் அதிவேகப் பாதைகள் திட்டமும், ஆசிய பாதை வலைப் பின்னலும்

டிமயழளானத லன இஓடனத ஈனடசம இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் அதிவேகப் பாதைக்காக-ராமர்-பாலத்தை பயன்படுத்தும் விதம்

உன்ளட கனுேள் நைஇயைகரளு தேசிய இயற்பியல் திட்டத்தின் அதிவேகப் பாதை திட்டமும் ஆசிய பாதை வலைப் பின்னலும்

சுழயன னுநளநடழிஅநெவ தேசிய இயற்பியல் திட்டத்தின் அதிவேக பாதைத் திட்டம்

தவறாக இருந்தாலும் தாதியர்களுக்குப் பதிலாக இராணுவத்தை ஈடுபடுத்த ஆலோசனை வழங்கியமை பிற்போக்கான செயல் என்பதை கூற வேண்டியதில்லை. வைத்தியர்களின் பக்கத்தில் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும்போது அவற்றை மறந்து இப்படியான செயல்களையே இச்சங்கம் செய்கிறது.

இறுதியாக கூற வேண்டியது, இது தொழில் சார்ந்த போராட்டமல்ல அரசாங்கமும் தொழிற் சங்கமும் சேர்ந்து நடத்திய நாடகமாகும். சுகாதார சேவையை தனியாரிடம் ஒப்படைப்பதற்கு எதிரான, சுகாதார ஊழியர்களின் சிறந்த சேவைக்கான நிபந்தனைகளுக்கான, சமூக சுகாதார சேவையை வெட்டுவதற்கு எதிரான, சுகாதார சேவையை தனியாரிடம் ஒப்படைப்பதற்கு எதிரான போராட்டமே உண்மையான போராட்டமாக இருக்கும். அந்தப் போராட்டங்களை நோயாளிகளின் சுகாதார வசதிகளை பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காக நடத்தும் போராட்டத்தோடு இணைக்க வேண்டும். அப்போதுதான் சுகாதார ஊழியர்களுக்கு எதரான தூண்டுதல்களை தோற்கடிக்க முடியும். தொழிற் சங்கங்கள் தமது இருப்பிற்காக கோத்திரவாதத்தை தூண்டுவதால் ஒட்டுமொத்த சுகாதார சேவையுமே அழிந்துவிடும்.

வடகிழக்கை மட்டுமல்ல, இலங்கையையே நவதாராள பொருளாதார சூறையாடலுக்கு உள்ளாக்கி, அனைத்து உழைக்கும் வர்க்கங்களின் ஒட்டுமொத்த வாழ்வையும் அழிக்கின்றது. இதற்கு ஆதரவாக தமிழ்-சிங்கள தேசியவாதங்கள் இயங்குவதுடன், அது சார்ந்து இயங்கும் சுரண்டும் வர்க்கங்கள் மக்களை சுரண்டுவது யுத்தத்தின் பின்னான ஐந்து வருடங்களில் கூர்மையாகி இருக்கின்றது. சுரண்டப்படும் வர்க்கங்கள் தங்கள் வாழ்வை இழப்பதும், தங்கள் தேசிய தன்மையை பறிகொடுப்பதுமே இன்று நடந்தேறுகின்றது. தமிழ்-சிங்கள இனவாதம் ஆதரித்து முன்னெடுக்கும் நவதாராளவாதம், இதையே இன்று செய்கின்றது.

# யுத்தம் முடிந்து ஐந்தாண்டுகளின் பின்பாக



சரணடைந்தவர்களும், கைதானவர்களும் எங்கே என்று தேடும் மனித உணர்வுகள் உருவாக்கும் உளவியல் சித்திரவதைகள் வாழ்வையே நடைப்பிணமாக்குகின்றது. இராணுவத்திடம் இருந்து மறுவாழ்வு பெற்றவர்கள் அடிமைகள் போல் அச்சத்துக்குள்ளும், சமூகப் புறக்கணிப்புக்கும் உள்ளாகி, வாழவே முடியாது தனிமைப்பட்டு கிடக்கின்றன

யுத்த அவலங்கள் அன்றாட வாழ்வின் துயரங்களாகவும், பொருளாதார மீள்கட்டுமானமோ வாழ்வின் சிதைவுகளாகவும் மாறி இருக்கின்றது. வடகிழக்கில் ஆயிரக்கணக்கில் காணாமல் போனவர்களைத் தேடுவதும், அதற்கு எதிரான அரசின் அச்சுறுத்தல்கள் பாரிய உளவியல் சித்திரவதையாக மாறியிருக்கின்றது. பல பத்தாயிரம் மக்கள் மீது காட்டுமிராண்டிதனமாக குண்டு வீசிக் கொன்று குவித்தவர்கள் மீதான விசாரணைகளின்றி, பாதிக்கப்பட்ட மக்கள் தீராப்பகையுடன் குமுறி அழுகின்றனர். சரணடைந்தவர்களும், கைதானவர்களும் எங்கே என்று தேடும் மனித உணர்வுகள் உருவாக்கும் உளவியல் சித்திரவதைகள் வாழ்வையே நடைப்பிணமாக்குகின்றது. இராணுவத்திடம் இருந்து மறுவாழ்வு பெற்றவர்கள் அடிமைகள் போல் அச்சத்துக்குள்ளும், சமூகப் புறக்கணிப்புக்கும் உள்ளாகி, வாழவே முடியாது தனிமைப்பட்டு கிடக்கின்றனர். யுத்தத்தில் கணவனை பறிகொடுத்த பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் பொருளாதார சுமையால் நசிந்து சிதைந்து வருகின்றனர். துணையை இழந்த பெண்களின் இயற்கையான பாலியல் தேவையை, ஆணாதிக்கம் தனக்கு சாதகமாக்கி பெண்களை சூறையாடுகின்றது. சுயமாக சொந்தக் காலில் உழைத்து வாழ்ந்த சமூகத்தின் சொத்து, உழைப்பு எல்லாம் அழிந்து வதைபடும் வாழ்க்கையை, தொடர்ந்தும் பட்டுப்போக வைக்கும் நவதாராள பொருளாதாரத்துக்கு எதிராக சுயமாக எழுந்து கூட நிற்க முடியாத சோகம்.

சூறையாடும் கடன் பொருளாதாரமே அரசின் மீள்கட்டுமானம். வீட்டுக்கு வீடு கடனைத் திணித்து, பொருளைக் கொடுத்து, எஞ்சிய அனைத்தையும் அபகரிக்கின்றது நவதாராள பொருளாதாரம். இந்த நவதாராள சதியில் மூழ்கிப் போகும் வண்ணம் வாழ்க்கையை குறுக்கி இருக்கின்றது. உழைத்து வாழும் மனிதப் பண்பாட்டை அழித்து, பொறுக்கி வாழும் பண்பாட்டு திணிப்புக்களை உருவாக்கி இருக்கின்றது. இதற்குள்ளாக சமூக உறவுகள் சிதைந்து, புழுக்களாக நெளிந்து இழிவுறும் வாழ்க்கைமுறை தோன்றி இருக்கின்றது.

வடகிழக்கில் நவதாராள லும்பன் பண்பாடும் கலாச்சாரமும் விதைக்கப்படுகின்றது. சுயநிரண்ய உரிமை கோரி நிற்கும் தமிழ் சமூகத்தின் அனைத்து சுயஅடையாளமும், சமூகத்தன்மையும் அழிக்கப்படுகின்றது. சுய பொருளாதாரம், மொழி, பண்பாடு அனைத்தும் அழிப்பதே, யுத்தத்துக்கு பிந்தைய வடகிழக்கில் அரசு முன்னெடுக்கும் கொள்கை. சுயபொருளாதாரத்தை அழிக்க நவதாராள பொருளாதாரமும், சுய பொருளாதாரம் சார்ந்த மொழிப் பண்பாட்டை அழிக்க இனவாதமும் கையாளப்படுகின்றது. நவதாராள மற்றும் இனவாதம் கொண்டு வடகிழக்கு மக்களின் மொத்த வாழ்வு அழிக்கப்படுகின்றது. இது தான் அரசு முன்னெடுக்கும் கொள்கை.

அதேநேரம் யுத்தத்துக்கு பின்பாக அரசு நாடு தழுவிய ரீதியில் அனைத்து சிறுபான்மை சமூகப் பிரிவுகள் மீதான அடக்குமுறைகளைத் தீவிரமாக்கி இருக்கின்றது. பெரும்பான்மையைச் சாராதவர்களை, எதிரியாக முன்னிறுத்துகின்றது. வடகிழக்கில் வாழும் மக்களை, தனது நாட்டு மக்களாக கருதி அரசு செயற்படவில்லை. அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கவில்லை. புலிகள் அழிந்து யுத்தத்தை முடித்த போதும், அரசு யுத்தசூழலை பாதுகாத்து வைத்திருக்கின்றது. இதன் மூலம் இனரீதியாக மக்களை அடக்கியாளுகின்றது. ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு சூழலே, வடகிழக்கில் தொடர்கின்றது. அங்கு இராணுவ ஆட்சியே நடக்கின்றது. சிவில் சட்ட ஆட்சிக்குப் பதில், சட்டவிரோதமான கும்பலின் அடாவடித்தனமான ஆட்சியே நடக்கின்றது. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட சட்டரீதியான உறுப்புகள் கூட, அங்கு சுயமாக செயல்பட முடியாது செயலற்று நிற்கின்றது.

ஒரு கும்பலுடன் சேர்ந்த இராணுவமே, அனைத்தையும் தீர்மானிக்கின்றது. சட்டவிரோதமாக இயங்கும் புலனாய்வு உறுப்புகளே, அனைத்தையும் கண்காணிக்கின்றது. தொடரும் கைதுகள் கூட, சட்டவிரோதமான வடிவில் இனம் தெரியாதவர்கள் கடத்தி காணாமல் போகும் அதே வடிவில் நடக்கின்றது. வடகிழக்கில் நடக்கும் கைதுகள் வெளித்தெரிய முடியாத அளவுக்கு, இராணுவ சூனியப் பிரதேசமாக்கப்பட்டு இருக்கின்றது. காணாமல் போதல் இன்னமும் தொடருகின்றது. பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்க முடியாத வண்ணம், இனம் தெரியாதவர்களின் தொடர் வன்முறைக்கு உள்ளாகின்றது. கூட்டங்கள், ஊர்வலங்கள் இனம் தெரியாதவர்களின் வன்முறைக்கு உள்ளாகின்றது. இனம் காணப்பட்டவர்கள் மீது இனம் தெரியாதவர்களின் தாக்குதல்கள், மிரட்டல்கள்.. வடகிழக்கின் அன்றாட நிகழ்வாகின்றது.

வடகிழக்கு மக்கள் சுயமாகவே அச்சம் கொள்ளும் வண்ணம், உளவியல் அழுத்தத்துக்கு உள்ளாக்கப்படுகினறனர் திட்டமிட்ட இனமத ரீதியான, ஆக்கிரமிப்புக்களை நடத்துகின்றது. சிறுபான்மையை புறக்கணிக்கும் இன மத ரீதியாக, சலுகைகளை வழங்குகின்றது. வடக்கு கிழக்கில் காணப்படும் சமூக முரண்பாடுகளை தனக்கு சாதகமாக்கி, அதற்கு சலுகையை வழங்குவதன் மூலம் பிரிவினையை உருவாக்கி சலுகைகளை வழங்குவதன் மூலம், அரசுக்கு எதிரான சக்திகளை பிரித்து சிதைக்கின்றது.

யுத்தம் தொடங்கக் காரணமான முரண்பாடுகள், யுத்தம் முடிந்து ஐந்து வருடமாகியும் தீர்க்கப்படவில்லை. யுத்தம் மூலம் ஒரு இனத்தை வென்றதான இனத் தற்பெருமையை, பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஏற்படுத்த அரசு முனைகின்றது. வருடாவருடம் யுத்த வெற்றி கொண்டாட்டங்களை முன்னெடுக்கும் அரசு, கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வதைக்கூட "பயங்கரவாதச்" செயலாகவே காட்டுகின்றது.

யுத்தத்தின் பின்பாக மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தியின் பெயரில், நவதாராளவாத பொருளாதாரத்தை முன்னெடுக்கின்றது. இதன் மூலம் நவதாராள பொருளாதார ஆக்கிரமிப்பை முழுவீச்சில் நடத்துகின்றது. மக்களின் சுயபொருளாதாரம் அழிக்கப்படுகின்றது. இனமத ரீதியான ஆக்கிரமிப்புகளை மட்டும் அரசு முன்னெடுக்கவில்லை, நவதாராள பொருளாதார ஆக்கிரமிப்பை முன்னெடுக்கின்றது.

யுத்தத்தின் பின்பாக மக்களின் வாழ்வு சார்ந்து உருவாக்கும் உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் அழிக்கும் வண்ணம், நவதாராள பண்பாட்டு ஆக்கிரமிப்பை பாரியளவில் முன்னெடுக்கின்றது. இதை எடுத்துச் செல்ல இன்று பல தொலைக்காட்சிகளை (ரிவிகளை) இயக்குகின்றது. இந்திய நாடகத் தொடர்கள், சினிமாக் காட்சிகள் மூலம், மக்களின் வாழ்வை இதற்குள் திசை திருப்பி விடுகின்றனர். 1989-1990 களில் ஜே.வி.பியை அரசு ஒடுக்கிய பின்பாக, கட்டுநாயக்காவில் இலவச இசைவிழாக்களை நடத்தியது. இதே போன்று யுத்தத்தின் பின் வாராவாரம் இலவச இசை விழாக்களை வடகிழக்கில் நடத்துகின்றனர். அங்கு குடியும் கூத்தும் பாலியல் வக்கிரமும் அரங்கேறுகின்றது. அதையே சமூகத்தின் பண்பாடாக்குகின்றது.

உழைத்து வாழ்ந்த ஒரு சமூகத்தின் வாழ்வியல் பண்பாட்டு கலாச்சாரக் கூறுகள் அழிக்கப்பட்டு வருகின்றது. அதற்குப் பதில் வீங்கி வெம்பிய நவதாராள நுகர்வு லும்பன் பண்பாட்டுக் கூறுகளை, சமூகத்தின் பண்பாடாக்குகின்றனர். உழைப்பற்ற, பண்பாடற்ற சமூகமாக்குகின்றனர். உழைத்து வாழ்வது இழிவான செயலாக்கப்படுகின்றது. மற்றவன் உழைப்பில் வாழ்தலே வாழ்க்கை முறையாக்கப்படுகின்றது. புலம்பெயர்ந்தவர்களின் பணத்தையும், வங்கிக் கடன்களையும் கொண்டும், வீங்கி வெம்பி விதம்விதமாக நுகர்வதே யுத்தத்தின் பின்னான வாழ்க்கையாகின்றது.

பணம் படைத்த சிலரும், ஏழ்மையைக் உடமையாகக் கொண்ட பெரும்பாம்மையினருமாக வடகிழக்கு சமூகம் வீங்கி வருகின்றது. ஏழை பணக்காரனுக்கு இடையிலான இடைவெளி என்பது, நிரப்பமுடியாத வண்ணம் அகண்டு வருகின்றது.

மறுபடியும் சாதியமும், சாதிய முரண்பாடுகளும் முதன்மையாக்கப்பட்டு வருகின்றது. மக்களின் வாழ்க்கையை வீழ்த்தும் வண்ணம், கோயில் கோபுரங்கள் வானளாவுக்கு ஆக்கிரமிப்புகளைச் செய்கின்றது. அதேவேளை உழைத்து வாழ்வதை கேவலமாகவும், பொறுக்கித் தின்பதை உயர்வாகவும் கருதும் நவதாராள பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கி வருகின்றது.

இதையே அரசு தனது பொருளாதாரக் கொள்கையாக நாடு தழுவிய ரீதியில் நடைமுறையாக்கி வருகின்றது என்றால், அதை வடகிழக்கில் வெம்பி அழுகும் வண்ணம் முன்னெடுக்கின்றது.

இந்தச் சூழலில் நவதாராளத்தை முன்னெடுக்கும் "சிங்கள தேசியவாதமும்" பதிலான "தமிழ் தேசியவாதமும்" மலடாகி வக்கிரமடைகின்றது. வடகிழக்கில் அரசு இன ரீதியாகவும், நவதாராளவாத பொருளாதார மூலமும் முன்னெடுக்கும், ஆக்கிரமிப்பையும், ஒடுக்குமுறையையும் எதிர்த்து திராணியற்ற "தமிழ்தேசியம்" இயங்கவில்லை. மாறாக அரசு முன்னெடுக்கும் நவதாராள பொருளாதார மற்றும் பண்பாட்டு ஆக்கிரமிப்பை பின்னணியில் இருந்து ஆதரிக்கும் "தமிழ்தேசியம்", இன ஆக்கிரமிப்பை மட்டும் எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்கிறது. உழைக்கும் சொந்த மக்களை சார்ந்த சுயபொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட தேசியத் தன்மைக்கு பதில், நவதாராள பொருளாதார கைக்கூலித்தனத்தையே தமிழ் "தேசியமாக" முன்னிறுத்துகின்றது.

அதாவது அரசின் நவதாராள பொருளாதாரக் கொள்கையையே "தமிழ்தேசியமும்" ஆதரிக்கின்றது. இதன் அர்த்தம் நவதாராள பொருளாதாரக் கொள்கைக்கு மாற்றாக தமிழ்தேசியத்திடம் வேறு பொருளாதாரக் கொள்கைகள் கிடையாது. அதாவது தேசியம் சார்ந்த சுய பொருளாதாரக் கொள்கை கிடையாது. யுத்தத்தின் பின்னான வடகிழக்கில் மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தியாக அரசு, எந்த நவதாராள பொருளாதாரத்தை முன்னெடுக்கின்றதோ, அதையே "தமிழ்தேசியமும்" முன்வைக்கின்றது. வடகிழக்கு மக்கள் இதற்கு எதிராக அணிதிரளாத வண்ணம், தமிழ் இனவாதத்தை முன்னெடுக்கின்றது. அரசு சிங்கள இனவாதத்தை முன்னெடுப்பது போல், "தமிழ்தேசியம்" தமிழ் இனவாதத்தை முன்வைத்து செயற்படுகின்றது.

அரசும், தமிழ் தேசியமும், நவதாராள பொருளாதாரத்தையுமே தங்களின் சொந்த இன மக்களுக்கு எதிரான கொள்கையாகக் கொண்டுள்ளது. இதை மூடிமறைக்க இனவாதத்தை முன்னெடுக்கின்றது. உழைக்கும் மக்கள் சார்ந்த சுய தேசிய பொருளாதாரக் கொள்கையை மறுத்து முன்வைக்கும் தேசியம் என்பது, உலகமயமாதல் அடிப்படையிலான நவதாராளமயமே. அரசு மேற்கு அல்லாத ஏகாதிபத்தியங்களை சார்ந்து தன்னை முன்னிறுத்த, தமிழ்தேசியமோ மேற்கு சார்ந்து தன்னை வெளிப்படுத்துகின்றது.

இந்த அடிப்படையில் புலம்பெயர் தமிழ்தேசியம் மேற்கு ஏகாதிபத்தியங்களின் தொங்கு சதையாக இயங்குகின்றது. யுத்தத்துக்கு முன் மேற்குடன் சேர்ந்து புலித் தலைமையைக் காட்டிக் கொடுத்து அழித்த அதே அரசியலையே, புலம்பெயர் தமிழ்தேசியம் தொடர்ந்து முன்னெடுகின்றது.

தமிழ்தேசியம் உழைக்கும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் புறந்தள்ளி, நவதாராளத்தையே தனது "தேசியமாக" காட்டுகின்றது. இதைத்தான் அரசும் சொந்த உழைக்கும் மக்களைச் சாராத, நவதாராளவாதத்தையே தனது "தேசியமாக" முன்னிறுத்துகின்றது. சுய பொருளாதாரம் சாராத தேசியம் போலியானதும், உழைத்து வாழும் மக்களுக்கு எதிரானதுமாகும். அது இன்று

13 ஆம் பக்கம் பார்க்க...

# மானிட விடுதலை மாணவர் ஒருபடை



> **இவ்வாறு புலிகளின் படையில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டவர்களும் இடையில் மனிதக் கேடயங்களாக அகப்பட்ட மக்களுமே கொல்லப்பட்டார்கள் என்பதை நம்புமாறு கோருகிறார்கள். அவர்களே சொல்வதை வைத்துப் பார்த்தால் கூட இறந்தவர்கள் அப்பாவிகள் என்கிறார்கள்**

இறந்துபோன தமது உறவுகளை நினைவுகூரும் நாட்களை முன்னிறுத்திய எந்தச் செயற்பாட்டிலும் மாணவர்கள் ஈடுபடுவதை தடைசெய்வதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை நிறுத்தி மாணவர்களை பல்கலைககழக வளாகத்திலோ அல்லது விடுதிகளிலோ இருக்க முடியாதென தடையுத்தரவு போட்டது இந்த ஒடுக்குமுறை அரசு. முள்ளிவாய்க்காலில் மரணிக்கப்பட்ட தமது உறவுகளை தாயாகவிருந்தோ, தந்தையாகவிருந்தோ, சகோதரர்களாகவிருந்தோ அவர்களது பெருந்துக்கத்தைக் கூட தமது குரல்வளைக்குள் விழுங்கிவிட வேண்டும். மாண்டாரை நினைத்து வருடங்கள் தோறும் தாம் வாழும் காலங்கள் முழுவதும் பழஞ்சலிப்பு சொல்லி இறந்தவர் நினைவுகளை வரிவரியாகச் சொல்லி அழுவது நமது கிராமிய வழக்கம். இப்படி அழுவதால் சோகச் சுமையிலிருந்தும் தங்களது அன்புக்குரியவர்களின் இழப்பைத் தாளாமல் தனியாகத் தவிக்கின்ற மனவேதனையை ஊராருக்கு ஒப்புவிக்கிறபோது உறவுகளை இழந்தவர்கள் சற்றேனும் நிம்மதியடைகிறார்கள். சோகச் சுழற்சிக்குள் தனித்துவிடப்படாமல் சமூகத்தின் அரவணைப்புக்குள் அவர்களது வேதனைகளும் தணிந்து போகின்றன. தமிழனாய் இருந்தால் என்ன சிங்களவனாய் இருந்தாலன்னெ முஸ்லீமாய் இருந்தால் என்ன மனிதர்களாகப பிறந்தவர்கள் அனைவருக்கும் இது அடிப்படையானது. இலங்கை வரலாற்றிலேயே முதன்முதலாக முதலாளித்துவ அரசினை தூக்கியெறிய முனைந்த முதன்முதலான ஆயுதப் போராட்டம் பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை கொன்றழித்ததன் மூலம் அவர்களை இந்திய சீன உதவியுடன் வேட்டையாடி அழித்தொழித்ததன் மூலம் தென்பகுதி மக்கள் பலர் தமது புத்திரர்களையும் புதல்விகளையும் இழந்தனர். சிங்களவருக்கான அரசு என்று சொல்லப்படுகின்ற இலங்கை அரசே தான் சிங்கள மக்களின் சிங்களப் புத்திரர்களையே கொடூரமாக கொன்றழித்தது. கதிர்காம அழகி மன்னம்பெரியை பாலியல் வல்லுறவு செய்து தெருவில் நிர்வாணமாக ஊர்வலமாய் அழைத்துச் சென்று இறுதியில் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிர் முழுவதுமாகப் பிரியும் முன்னரே வெட்டிக் கிடங்கில் இலங்கையின் பொலீசுப்படை புதைத்தது.

இன்று முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக குலைகுலையாக கொன்றழிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்காக மக்களோடு மக்களாக மாண்டு போய்விட்ட தமது உறவுகளுக்கு,தாங்கள் நம்பும் இறுதிக்கடமைகளைக் கூட செய்து ஆறுதலடைய முடியாதவர்களாய், தீபமேந்தி நினைவுகூருவதைக் கூட,அவர்களது சோகத்தை அன்றொருநாளாவது கூட கூட்டாக வெளிப்படுத்தமுடியாதபடி சூழ்ந்து நிற்கிறது இராணுவம்.

புலிகள் சிறுவர்களையும், இளைஞர்களையும் இறுதிப் போரில் இராணுவத்திற்கெதிராக,முறையான ஆயுதப்பயிற்சி கூட வழங்காமல் கட்டாயமாய் இழுத்துச் சென்று சேர்த்துக்கொண்டார்கள் என்று அரசு வாய்கிழியப் பிரச்சாரம் செய்தது. போரின் போது இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுக்க அப்பாவி மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினார்கள் என்று நீலிக் கண்ணீர் வடித்தது. இவ்வாறு புலிகளின் படையில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டவர்களும் இடையில் மனிதக் கேடயங்களாக அகப்பட்ட மக்களுமே கொல்லப்பட்டார்கள் என்பதை நம்புமாறு கோருகிறார்கள். அவர்களே சொல்வதை வைத்துப் பார்த்தால் கூட இறந்தவர்கள் அப்பாவிகள் என்கிறார்கள். இந்த அப்பாவிகளைக் கூடவாநினைவுகூர முடியாது என்பதற்கு பதில் வராது. ஆனால் இன்று முரணாக நினைவுகூருவதற்கு தடை என்பதன் மூலம் தங்களால் சாகடிக்கப்பட்டவர்கள் ஒன்றுவிடாமல் அனைவருமே புலிகள் தான் என்ற சமன்பாட்டை இராணுவக் கெடுபிடிகளால் வில்லங்கமாக நிறுவ முனைகிறார்கள்.

புலிகள் தான் போரில் சாகடிக்கப்பட்டார்கள் என்றால் கூட, அந்தப் போராளிகளை இழந்த உறவுகளுக்கு அவர்களை நினைவுகூரும் உரிமை உண்டு. எவ்வாறு அரசுக்கு எதிராகவே ஆயுதமேந்திப் போராடி அரச படைகளால் கொல்லப்பட்ட சிங்கள இளைஞர்களையும் யுவதிகளையும் நினைவுகூருவதற்கு சிங்கள மக்களுக்கு உரிமை இருக்கின்றதோ அதே உரிமை தமிழ் மக்களுக்கும் உண்டு. இனவாதச் சூழலுக்குள்ளும் ஒடுக்குமுறைக்குள்ளும் அகப்பட்டிருந்த மக்கள் தங்கள் உறவுகளை கொடூரமான வகையில் போரில் இழந்திருக்கிறார்கள். அவர்களது கண்ணீர் அவர்களது உறவுகளின் நினைவுகளை மட்டுமல்ல போரில் கொல்லப்பட்ட அனைத்து மக்களையும் நினைந்து வருவது தான். போரில் ஈடுபட்டவர்கள் எவராகவும் இருக்கட்டும், போரில் வீழ்ந்துபட்டவர்களுக்கு மரியாதை செய்யும் வழக்கம் என்பது எந்தக் கொடிய போரிலும் எதிராளிகளின் மனிதக்கூறு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நினைவுகூரும் நாள் ஒரு பொது நிகழ்வாக நடாத்தப்படுவதை முறியடிப்பதற்காகவே பல்கலைக்கழகத்தினை இந்த நாட்களில் மூடப்படுவதற்கு மகிந்த அரசு உத்தரவிட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் சமுதாயப் போராட்டங்களின் முன்னோடிகளாக மாறிவிடுவார்கள் என்ற அச்சமே அரசை ஆட்டிப்படைக்கிறது. இவ்வாறு முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் நாளடைவில் மக்கள் போராட்டங்களாக வியாபித்துவிடும். அத்தோடுஇன்று தென்னிலங்கையில் கொதித்தெழும் மாணவர் போராட்டங்களுடன் கைகோர்த்து, இனவாதம் கடந்த ஒன்றுபட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்துக்கும் எழுச்சிக்கும் வழிவகுத்துவிடும் என்ற பயப்பிராந்தியுடன் அரசானது தனது கொடிய கரம் கொண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களை மட்டுமல்லாது தென்னிலங்கை பேராதனை, காலி, ரஜரட்டை மாணவர்களின் போராட்டங்களையும் மாணவர்களை கடத்தியும், கைது செய்தும், அடித்து உதைத்தும், காணாமற் போக வைத்தும் அடக்கி ஒடுக்குகிறது. கல்வியினை தனியார்மயமாக்கி வியாபாரமாக்குகின்ற நவதாராளவாத கொள்கைகளுக்கு எதிராகக் கிளம்பும் மாணவர்களின் போராட்டங்களை படையணி கொண்டு ஒடுக்குகிறது. இந்த நவதாராளவாதத்திற்குள் நாட்டினை கட்டியிழுத்துச் செல்லும் போது அதற்குள் அகப்பட்டு தமது கல்வியுரிமையை இழக்கப்போவது தென்பகுதி மாணவர்கள் மட்டுமல்ல. நாட்டின் ஒட்டுமொத்த கல்விச் செயற்பாடுகளும் நவதாராளவாதத்தின் பிடிக்குள்ளே வீழந்து போய் மொழி இனம் கடந்து ஒட்டுமொத்த கல்வியுரிமைக்கே ஆப்பு வைக்கப்படும். தென்னிலங்கை மாணவர்கள் தமது போராட்டங்களில் தங்களது சகோதர இனமான தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளை பிரதிபலிக்கும் யாழ் மற்றும் கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களை இனங்கடந்த போராட்டமாக கட்டியமைக்கும் வகையில் தமது எதிர்ப்புக்களைக் காட்டி அவர்களது போராட்டங்களுக்கு ஒரு நாடு தழுவிய குரலாக வலிமை சேர்க்கப் போகும் நடவடிக்கைகளில் தமது சக்திகளையும் இணைந்துகொள்ள முன்வருகின்ற போது அதனை விரும்பாத தமிழ் மற்றும் சிங்கள இனவாத சக்திகள் இனவாதச் சாயம் பூசி அரசியல் செய்ய முனைவார்கள். இவர்களது நடவடிக்கைகளையும் மீறி மாணவர்கள் தமது சமுதாயப் பொறுப்புடன் இனவாத மதவாதப் பிளவுகளைக் கடந்த முற்போக்கான போராட்டங்களில் தமது சக்திகளை குவித்து தமது போராட்டங்களை ஒடுக்கப்படும் அனைத்து மக்களுடனுமான போராட்டங்களுடன் இணைத்து ஓர் அணியாக வேண்டும். மானிட விடுதலை மாணவர் ஒருபடை.

# பிளவுபடுத்தும் செயலை தோற்கடித்து, ஒன்றிணைக்கும் செயலை பலப்படுத்துவோம்!

**சம உரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் ரவீந்திர முதலிகே**

இந்தப் பக்கம் இம்முறை ஒதுக்கப்படுவது, சம உரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் ரவீந்திர முதலிகேயுடனான நேர்காணலுக்காக. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைப்பதற்காக ஆட்சியாளர்கள் எடுக்கும் முயற்சியும், அதற்காக சம உரிமை இயக்கத்திடம் உள்ள வேலைத் திட்டமும் இதன்போது கருத்தாடலுக்கு எடுக்கப்பட்டது

**கேள்வி: சம உரிமை இயக்கம் சில காலமாக மௌனம் சாதித்து வருகிறது. ஏன் இந்த மௌனம்? சம உரிமை இயக்கத்தின் கடமைகள் நிறைவடைந்து விட்டனவா?**

**தோழர் ரவீந்திர:** இலங்கை சமூகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு பதிலளிப்பதற்காகவே சம உரிமை இயக்கம் தொடங்கப்பட்டது. வரலாறு பூராவும் இலங்கையில் பல்வேறு இன, மத தனித்துவங்களுடனான மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால், அனைவருக்கும் நீதி நியாயத்தை பெற்றுக் கொடுக்கக் கூடிய சூழலை உருவாக்கும் ஆற்றல் முதலாளித்துவத்திற்கு கிடையாது. அது மட்டுமல்ல, முதலாளித்துவத்திற்கே உரித்தான நெருக்கடி என்பதால், ஏற்படும் அழுத்தத்திற்கு பதில் தேடுவது போலி எதிரிகளை நிர்மாணித்து. இலங்கை மக்களின் பல்வேறு பிரிவினருக்கு தேசிய மற்றும் மத காரணங்கள் மீது தேசிய அழுத்தம் தொடுக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு தெரியாமல் அந்த தேசிய அழுத்தத்தை மூடி மறைக்க ஆளும் வர்க்கம் மதவாதத்தை பயன்படுத்துகிறது. தமிழ், முஸ்லிம் மக்களுக்குள் உள்ள அந்த தேசிய அழுத்தத்திற்கு எதிரான மனோபாவத்தை இனவாதத்தின் பக்கம் தள்ளவும் அதே சக்திகள் செயற்படுகின்றன. ஆதலால், சவால் இன்னும் முடிவடையவில்லை. சவால் மேலும் மேலும் விரிவடைகிறது. சம உமரிமை இயக்கத்தின் கடமை முடிவடையவில்லை. அது மேலும் மேலும் பரவலாகியிருக்கிறது. சம உரிமை இயக்கத்தின் அடிப்படை கொள்கைகளின்பால் மக்களை ஈர்த்துக் கொள்வது அவ்வளவு இலேசான காரியமல்ல. இந்த தேசிய, மத பிரிவினை கோடுகள் இந்த பித்துப் பிடித்த இனவாதத்தின் சுபாவம் என்றே பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள். இடதுசாரிய சிந்தனை எப்படியிருந்தாலும், தாராள சிந்தனைகூட அரிதாகவே உள்ளது. அப்படிப்பட்ட சமூகத்தில் எமது கடமை கஷ்டமான ஒன்றாகவே இருக்கிறது. நாம் அதனோடு போராடுகிறோம். பிரச்சார மட்டத்தில் மாபெரும் களியாட்டங்களை காட்டாவிடினும், நாம் அந்த சவாலோடு போராடிக் கொண்டிருக்கிறோம்.

**கேள்வி: யுத்தம் முடிவடைந்து 5 வருடங்கள் கடந்துவிட்டன. யுத்தத்தைப் பற்றியும் யுத்தத்தில் இறந்தவர்களை நினைவு கூர்வது பற்றியும் விவாதமொன்று நடக்கிறது. இது குறித்து சம உரிமை இயக்கத்தின் நிலைப்பாடு எத்தகையது?**

**தோழர் ரவீந்திர:** அரசாங்கத்தின் ஜனநாயகத்திற்கு முரணான தன்னிச்சையான நடவடிக்கையையும் தனது அதிகாரத்திற்காக தன்னால் எதுவும் செய்ய முடியும் என்பதையும் மே மாதம் 18ம் திகதி அரசாங்கம் வெளிக்காட்டியது. இறந்த தமது உறவினர்களின் நினைவாக ஒரு மெழுகுவர்த்தியைக்கூட பற்றவைக்க வடக்கு மக்களுக்கு அரசாங்கம் இடமளிக்கவில்லை. யாழ்ப்பாண பொலிஸார் ஏற்றப்பட்ட விளக்குகளை காலால் உதைத்து தள்ளினர். யாழ். பல்கலைக் கழகம் ஒருவாரம் மூடப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் விதமாக வடக்கில் இனவாதம் பலம்பெற்று வருகிறது. இந்த நிலைமையில் அதிகமான பொறுப்பு ஆட்சியாளர்களிடமே உள்ளது. அரசாங்கம் யுத்தத்திற்குப் பின்னர் தமிழ், சிங்கள, முஸ்லிம் எவருக்குமே நியாயத்தை வழங்கவில்லை. ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு விலங்கிட்டு, அவ்விலங்கை மறைக்க இனவாத மதவாத மோதலை உருவாக்குகிறது. வடக்கிலும் பயங்கரமான இனவாதம் துளிர்விட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் பதவி வெறி பிடித்தவர்களின் அரசியல் தேவைக்காக உருவாக்கும் பிரச்சினைகளால் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் அடிப்படைவாதிகளுக்கு தளம் அமைக்கப்பட்டு வருகிறது. இதனால் யுத்தத்திற்குத் தேவையான மனோபாவம் மீண்டும் போஷிக்கப்படுவதால் எதிர்காலத்தில் மேலும் பல யுத்தங்களுக்கு வழி சமைக்கப்படுகிறது. யுத்தத்தினால் துன்புறும் ஆயிரக்கணக்கானவர்களை தெற்கில் நாம் அன்றாடம் காண்கிறோம். கொழும்பில், பேருந்தில் ஒரு காலை இழந்த படை வீரனிலிருந்து, யாழ்பாணத்தில் ஆர்ப்பாட்டங்களின்போது நாம் சந்திக்கும் காணாமல் போன பிள்ளைகளை தேடும் தாய்மார்கள் வரை, இவர்கள் அனைவருமே யுத்தத்தினால் துன்புறுபவர்கள். நாம் நினைவு கூர்வதாயிருந்தால் அந்த அழிவைத்தான் நினைவு கூர வேண்டும். அந்த அழிவை நினைவு கூருவதன் ஊடாக அவ்வாறான கொடுமைகள் மீண்டும் வரக்கூடாதென்ற மன உறுதியையும் விளக்கத்தை சமூகமயப்படுத்த வேண்டும். அவ்வாறன்றி, நினைவு கூருவதற்கு எந்த வெற்றியும் கிடையாது. யுத்த வெற்றிகள் ஓரளவுதான். ஆயுத உற்பத்தியாளர்களும், அதனால் கொமிஸ் அடிப்பவர்கள், கொந்தராத்து செய்தவர்கள், மக்களின் பிளவினால் இலாபமடைந்த அரசியல்வாதிகள் போன்றோரே யுத்தத்தில் வெற்றி பெற்றுள்ளனர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எந்த வெற்றியும் இல்லை.



> **“ஆயுத உற்பத்தியாளர்களும், அதனால் கொமிஸ் அடிப்பவர்கள், கொந்தராத்து செய்தவர்கள், மக்களின் பிளவினால் இலாபமடைந்த அரசியல்வாதிகள் போன்றோரே யுத்தத்தில் வெற்றி பெற்றுள்ளனர்.”**

**கேள்வி: இப்போது புதிய பிரச்சினையொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறதல்லவா? சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு மத்தியிலும் இடைவெளி உருவாகி முஸ்லிம் சமூகத்தில் மனஉளைச்சல் நிர்மாணிக்கப்பட்டு வருகிறதல்லவா?**

**தோழர் ரவீந்திர:** தற்போது சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலே ஆகிய நாங்கள் எல்லோரும் ஒரே நாட்டில், ஒரே சட்டத்திற்குள், ஒரே பொருளாதாரத்தின் பங்காளிகளாக ஒரே சூழலில் வாழ்கிறோம். ஆனால் எங்களுக்கிடையில் உறவுகளோ, சந்திப்புகளோ நடப்பதில்லை. அதற்கு தொடர்ந்து தடைபோடப்பட்டிருந்தது. இது ஏகாதிபத்திய யுகத்திலிருந்தே இடையூறுகள் செய்யப்பட்டன. 1948ல் காலனித்துவவாதிகள் சென்ற பின்னர், இலங்கையின் முதலாளித்துவ ஆட்சியாளர்களும் மக்களை பிரித்தாள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். எமது நாட்டு மக்களை சிங்கள- தமிழ்- முஸ்லிம்- கத்தோலிக்கர் என்ற ரீதியில் பிளவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவர்களுக்கிடையிலான இடைவெளி அதிகரித்துக்கொண்டே வந்தது. சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களைப் பற்றி கதைக்கும்போது, அந்த இரு சமூகத்திலுமிருந்த புத்திஜீவிகளுக்கும் கூட இதனை தடுப்பதற்கான நோக்கம் இருக்கவில்லை. பின்னர் இலங்கையில் முதலாளித்துவத்தை நடாத்திச் செல்லக்கூடிய புதிய கண்ணோட்டம், புதிய பதில், புதிய செயற்பாடுகள், புதிய கோட்பாடு இல்லாமலாகும்போது இருப்பிற்காக ஆட்சியாளர்கள் இவர்களை ஒருவருக்கொருவர் எதிரிகளாக்க முயன்றனர். சிங்கள- தமிழ் உறவுகள் போன்றே சிங்கள- முஸ்லிம் உறவுகளும் அந்த நெருக்கடிக்குப் பலியாகின. சிங்கள- முஸ்லிம் மக்களின் உறவுகள் குறித்து நினைக்கும்போது பிரச்சினை ஆழமாகவே இருக்கிறது. மக்களை ஐக்கியப்படுத்துவதற்குப் பதிலாக மக்களை பிளவுபடுத்துவதற்கான சதி நடக்கிறது. இது ஒது பயங்கரமான நிலைமை. பிளவுபடுத்தும் செயலை தோற்கடித்து அதனை பலப்படுத்தவும் தேவையான சக்தி சம- உரிமை கொள்கையில் இருக்கிறது. இந்த கொள்கையின் மீதிருந்து இந்த அழிவை தடுப்பதற்கு ஒன்றுசேருவோமென அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

**கேள்வி: நீங்கள் கூறியதைப் போன்று இனவாதம் இயற்கையானதென நினைக்கப் பழகிக் கொண்ட சமூகம்தான் இப்போது இருக்கிறது. இந்த நிலைமையில் உங்கள் அழைப்பை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?**

**தோழர் ரவீந்திர:** இனவாதமும் மதவாதமும் நாங்கள் நினைப்பதை விட சமூகத்தில் ஆழமாகவே காலூன்றியுள்ளது, சிறு பிள்ளைகளுக்குக் கூட அந்த நச்சு ஊட்டப்படுகிறது. அரசியல், ஊடகச் செயற்பாடு, மொழி வழக்கு, அன்றாட வாழ்க்கை பழக்க வழக்கங்கள் போன்ற இவை ஒவ்வொன்றும் மீண்டும் மீண்டும் இனவாதத்தை போஷிக்கின்றன. ஒடுக்கப்பட்டவனின் கண்ணோட்டத்தில் மட்டுமல்ல, முதலாளித்துவ முறையின் நிலைத்தல், கைத்தொழில், சமாதானம் போன்றவற்றை எடுத்துக் கொண்டாலும் இது அழிவு. இது வெறுமனே நெருக்கடி மட்டுமல்ல, அழிவு. இதனால் அனைவருக்குமே ஆபத்து. ஆகவே இந்த அழிவை தடுக்க சிங்கள- தமிழ்- முஸ்லிம்- மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென நாங்கள் கருதுகிறோம். நாம் இந்த கொடுஞ்செயலோடு போராடுகிறோம். இதற்கு ஓரளவாவது இடமளிக்க வேண்டுமென நாங்கள் நினைக்கவில்லை. ஆனால், இப்போராட்டத்திற்கு இலங்கை சிங்கள- தமிழ்- முஸ்லிம் ஒடுக்கப்பட்டவர்கள், முற்போக்காளர்கள் ஒன்றுசேர வேண்டும். அப்படியல்லாமல் இதனை தோற்கடிக்க முடியாது. உலகம் அழிவது கெட்ட மனிதர்களின் கெட்ட வேலைகளினால் என்பதையும் விட, நல்ல மனிதர்கள் ஊமைகளாக இருப்பதனால் என்று சொல்லப்படுகிறது. சில காலத்திற்க முன்னர், சிங்கள- தமிழ்- முஸ்லிம் தனவந்தர்களுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்பாடுகளால் இனவாத மோதல்கள் உருவாக்கப்பட்டன. மேல்மட்ட ஆளும் வர்க்கத்திற்குள் உடன்பாடுகள் செய்துகொள்ளப்பட்டாலும், அவர்கள், கீழ்மட்ட மக்களுக்கிடையில் உடன்பாடுகளை செய்துக்கொள்ள, உறவுகளை வைத்துக்கொள்ள இடமளிக்கவில்லை. அவர்களது நெருக்கடியின் முன்னால் இனவாதத்தையும், மதவாதத்தையும் வளர்த்தன் ஊடாக சமூகங்களை கட்டிப்போட்டார்கள். சவால் பரவலானது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். என்றாலும், சவாலோடு போராட எமக்கு தைரியம் இருக்கிறது. நாம் இந்த கொடுமையான வரலாற்றை மாற்றுவோம்.

# ஜனாதிபதி ஆட்சி 'சர்வாதிகாரமாம்!' பாராளுமன்ற ஆட்சி 'ஜனநாயகமாம்!!'




"ஜனநாயகம்" பற்றி கொச்சைத்தனமாகவும், "சர்வாதிகாரம்" பற்றி முட்டாள்தனமாகவும், மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே ஆளும் வர்க்கச் சிந்தனை முறை. அரசுக்கு எதிரான ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் போராட்டத்தை முறியடிக்க முயலும் ஆளும் வர்க்கங்கள், ஜனாதிபதி ஆட்சிமுறையை "சர்வாதிகாரமாகவும்" பாராளுமன்ற ஆட்சிமுறையை "ஜனநாயகமாகவும்" இட்டுக்கட்டி காட்ட முற்படுகின்றனர். இந்த வகையில் தேர்தல் முறை தான் "ஜனநாயகம்" என்ற நம்புகின்ற வலதுகளுக்கும் இடதுகளுக்கும் இடையில், இன்று எந்த அரசியல் வேறுபாடுகளும் கிடையாது. ஆளும் அதிகாரமுறையை மாற்றினால், "ஜனநாயகம்" வந்துவிடும் என்கின்றனர்.

இந்த வகையில் தேர்தலில் வாக்கு போடுவதன் மூலம் தெரிவு செய்யும் "ஜனாதிபதி" முறையை "சர்வாதிகாரமாகவும்", பாராளுமன்ற முறையை "ஜனநாயகமாகவும்" காட்டுகின்றனர். இந்த ஆளும் வர்க்க அரசியலோ, வர்க்கரீதியான சர்வாதிகார ஆட்சியை மூடிமறைக்கும் பித்தலாட்டமாகும்.

ஆளும் வர்க்க அரசியலை முன்னெடுக்கும் தேர்தல் கட்சிகள், "ஜனநாயகம்" பற்றி கொண்டிருக்கக் கூடிய எல்லை என்பது மக்கள் வாக்கு போடுவது தான். இந்த எல்லையைக் கடந்து ஜனநாயகத்தை விளங்கிக் கொள்ளவோ புரிந்து கொள்ளவோ கூடாது. இதைத் தாண்டும் போது, எந்த முறைக்கு வாக்கு போடுவது என்ற எல்லைக்குள் "ஜனநாயகத்தை" குறுக்கி, அதை "ஜனாதிபதி ஆட்சிமுறையாக" காட்ட முற்படுகின்றனர். நிறைவேற்று ஜனாதிபதி முறையை கொண்டுள்ள இன்றைய அரசியல் அமைப்புச் சட்டத்தை நீக்குவதன் மூலம், நாட்டில் "ஜனநாயகத்தைக்" கொண்டு வர முடியும்" என்கின்றனர்.

இதுதான் அடுத்த தேர்தலில் எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் கொள்கைப் பிரகடனமாகும். ஆளும் வர்க்க ஆட்சி அம்பலமாகும் போது, அதைப் பாதுகாக்க முனையும் எதிர்க்கட்சிகள் அதற்கு காரணம் ஆளும் வர்க்கமல்ல ஆட்சிமுறை தான் காரணம் என்கின்றனர். எதிர்க்கட்சி சார்பாக ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம், ஆட்சிமாற்றத்தைக் கொண்டு வந்து ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்க முடியும் என்கின்றனர். ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றியவுடன், ஜனநாயகத்தைக் கொண்டு வரமுடியும் என்கின்றனர். முன்பு புலியை ஒழித்தால், "பயங்கரவாதம்" முடிவுக்கு வந்துவிடும் என்று கூறி, அரச பயங்கரவாதத்துக்கு கொம்பு சீவி விட்டவர்கள், இன்று ஜனாதிபதி முறையை மாற்றினால் அரச பயங்கரவாதத்தை அகற்றி "ஜனநாயகத்தை" நிறுவ முடியம் என்கின்றனர். அதாவது ஜனாதிபதி அல்லாத பாராளுமன்ற "ஜனநாயக" ஆட்சிமுறை, இலங்கை மக்களின் பிரச்சனைகள் அனைத்தையும் தீர்க்கும் என்கின்றனர்.

இப்படி இவர்கள் கூறுகின்றபடி பாராளுமன்ற "ஜனநாயகம்" வருகிறது என்றே வைப்போம்! அந்த "ஜனநாயகம்" யாருக்கானது? எந்த வர்க்கத்தினது "ஜனநாயகமாக" அது இருக்கும்? பாட்டாளி வர்க்கத்தின் ஜனநாயகமாக இருக்குமா? அல்லது சுரண்டும் வர்க்கத்தின் சுரண்டல் ஜனநாயகமாக இருக்குமா?

ஜனாதிபதி முறைக்கு எதிராக இவர்கள் கூறும் ஜனநாயகம் என்பது, உழைக்கும் மக்களின் ஜனநாயகத்தையல்ல, உழைப்பைச் சுரண்டும் வர்க்கத்தின் ஜனநாயகத்தைப் பற்றியே கூறுகின்றனர். அப்படியாயின் இலங்கையில் சுரண்டும் வர்க்கத்திற்கு ஜனநாயகமில்லையா!? என்ற கேள்வி எழுகின்றது. சுரண்டும் வர்க்க "ஜனநாயகம்" இருக்கும் போது, இங்கு "ஜனநாயகம்" என்ற கோசமே ஆளும் வர்க்கம் முன்வைக்கும் மோசடியாகும். மறுபக்கத்தில் "ஜனநாயகம்" என்பது வாக்கைப் பொறுக்கிகளின் அரசியல் பித்தலாட்டமாகும்.

வர்க்க ஆட்சிமுறையை பாதுகாக்கவும், ஆட்சிக்கு கைப்பற்றவுமே "ஜனநாயகம்" என்ற கோசம் தேவைப்படுகின்றது. இதை வலதுசாரிய எதிர்க்கட்சிகள் மட்டும் முன்வைக்கவில்லை, வர்க்கப் போராட்டத்தை மறுக்கும், இடதுசாரிகளும் கூட முன்வைக்கின்றனர். இவர்கள் அனைவரும் உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தைப் பார்த்துக் கூறுவது, வர்க்கப் போராட்ட அரசியலை இந்த ஆட்சிமுறைக்கு எதிராக முன்னெடுக்க வேண்டியதில்லை. மாறாக அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றும் போராட்டத்தை முன்னெடுத்தால் போதுமானது என்கின்றனர். அதாவது ஆட்சியையும், அரசியல் அமைப்பையும் மாற்றுவதற்காக வாக்குப் போட்டால் "ஜனநாயகம்" வந்துவிடுமென்கின்றனர்.

உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கை என்ன? முதலாளித்துவ வர்க்க ஜனநாயகத்துக்குப் பதில் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தையும், சுரண்டும் வர்க்க அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு பதில் சுரண்டலற்ற அரசியல் அமைப்புச் சட்டத்தையும் கோருகின்றது. அதாவது பாட்டாளி வர்க்க அரசியல் அதிகாரத்தைக் கோருகின்றது.

தேர்தல் தொடர்பாகவும், ஆட்சி அதிகாரம் தொடர்பாகவும், இரண்டு நேர் எதிரான அரசியல் பாதைகள் காணப்படுகின்றது. சுரண்டப்படும் வர்க்கமும், சுரண்டு வர்க்கமும், ஒரே ஜனநாயகத்தை ஒரு நாளும் பெறவும் முடியாது, அனுபவிக்கவும் முடியாது. சுரண்டும் வர்க்க ஜனநாயகத்துக்கு சுரண்டப்படும் மக்களை வாக்கு போடக் கோரும் மோசடி தான், பாராளுமன்ற "ஜனநாயகம்" பற்றிய பித்தலாட்டம்.

இன்றுள்ள அரசியல் அமைப்புச் சட்டமே, இலங்கையின் "ஜனநாயகத்துக்கு" ஆபத்தாக உள்ளதாகக் கூறுகின்றனர். வர்க்க அரசியலை நிராகரிக்கும் இடதுசாரியம் முதல் ஆட்சி மாற்றத்தைக் கோரும் எதிர்க்கட்சிகள் வரை, உலகமயமாதலில் ஒற்றைப் பரிணாமம் கொண்ட அரசியலை முன்வைக்கின்றது. இந்த அரசியல் என்பது "பாராளுமன்ற ஆட்சி" முறையை மாற்றுவதன் மூலம், வர்க்கப் போராட்ட அரசியலை நீக்கம் செய்யக் கோருகின்றனர்.

இதன் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்யும் "ஜனநாயகத்துக்கு" பதில் பாராளுமன்றத்தை தெரிவு செய்யும் "ஜனநாயகமே" உண்மையான "ஜனநாயகம்" என்கின்றனர். 1972, 1978 அரசியல் அமைப்பு சட்டங்களே ஜனநாயகத்தை பலவீனப்படுத்திப் உள்ளதாகவும், அதனால் மக்கள் பிரச்சனைகளுக்கு தீர்வுகளைத் தரவில்லை என்றும் கூறுகின்றனர். 1978 அரசியல் அமைப்புச்சட்ட அடிப்படையிலான ஜனாதிபதி ஆட்சிமுறை, நீதி, சட்டம் தொடங்கி பொது நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துவதாக கூறுகின்றனர். அரசின் சுயாதீன செயற்பாடுகளை அழித்து வருவதால், இந்த முறையை மாற்றுவதன் மூலம் மக்களுக்கான "ஜனநாயக" ஆட்சி தோற்றம் பெறும் என்கின்றனர்.

ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு முன்னான பாராளுமன்ற முறையில் மக்கள் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டதாகவும், மறுபடியும் அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்கின்றனர். ஜனாதிபதி ஆட்சிமுறை சர்வாதிகாரமானது, பாராளுமன்ற ஆட்சிமுறை ஜனநாயகமானது என்ற அரசியல் மோசடியை முன்வைக்க முனைகின்றனர். அதாவது ஜனாதிபதி ஆட்சிமுறைதான் மக்களின் பிரச்சனைகளுக்கு காரணமே ஒழிய, வர்க்க ரீதியான அரசு அல்ல என்கின்றனர். அரசு என்பது ஜனநாயகத்தன்மை கொண்டதாகவும், வர்க்க சர்வாதிகாரத்தைக் கொண்டதல்ல என்ற மோசடியை முன்வைக்கின்றனர்.

ஜனாதிபதி முறையோ, பாராளுமன்றோமோ, சுரண்டும் வர்க்க ஆட்சியை நடத்தும் சர்வாதிகார உறுப்பே ஒழிய. சுயாதீனமான வர்க்கமற்ற ஜனநாயக அமைப்பல்ல. ஆளும் சுரண்டும் வர்க்க சர்வாதிகாரத்துக்குத் தலைமை தாங்கும் எந்த ஆட்சி வடிவமாகட்டும், அது வர்க்க சர்வாதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்கு வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்பது, சுரண்டும் வர்க்கத்தை பாதுகாக்கும் ஆட்சியைத்தான் ஆட்சியாக தரமுடியும். பாராளுமன்ற "ஜனநாயகம்" வர்க்கத்தை ஒழிக்கும் வர்க்கமற்ற மக்கள் ஆட்சியையோ, பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தை தரப்போவதில்லை. மாறாக இதை ஒடுக்கும் "ஜனநாயகம்" தான், பாராளுமன்ற ஆட்சி முறையும்.

ஆளும் வர்க்க ஆட்சி என்பது சுரண்டும் வர்க்கத்தின் ஆட்சியாகவும், வர்க்க சர்வாதிகாரத்தை அடிப்படையாக கொண்டதாகவும் இருக்கும். அதேநேரம் அந்த ஆட்சியை முன்னெடுக்கும் எந்த வடிவமாகட்டும், வர்க்க சர்வாதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டதே.

ஜனாதிபதி முறையாக இருந்தாலும், பாராளுமன்றமாக இருந்தாலும் சரி அல்லது வேறு எதுவாக இருந்தாலும், அது சுரண்டும் வர்க்கத்தின் நலன் சார்ந்த வர்க்க சர்வாதிகாரத்தை கொண்டது. இது உலகளாவிய பொது உண்மை. சுண்டும் வர்க்க "ஜனநாயகம்" என்பது, சாராம்சத்தில் வர்க்க சர்வாதிகாரம் தான்.

சுரண்டும் வர்க்க சர்வாதிகாரத்தையே, முதலாளித்துவம் மூடிமறைத்த "ஜனநாயகமாக" முன்வைக்கின்றது. இதற்கு எதிராக பாட்டாளி வர்க்க சுரண்டலற்ற ஜனநாயகத்தை கோருகின்றது. சாராம்சத்தில் இது சுரண்டலுக்கு எதிரான மக்கள் சர்வாதிகாரமாகும்

சுரண்டுவதை முன்னிறுத்திய "ஜனநாயகமா" அல்லது சுரண்டப்படும் உழைக்கும் மக்களை முன்னிறுத்திய சுரண்டலுக்கு எதிரான ஜனநாயகமா என்ற, இரு நேரெதிரான செயற்பாடுகள் "ஜனநாயகத்தை" அடிப்படையாகக் கொண்டு அணிதிரள வைக்கின்றது.

சுரண்டலை பாதுகாக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றுவதா அல்லது சுரண்டலை ஒழித்துக்கட்டும் அரசியல் அமைப்பை உருவாக்குவதா என்பதே, இன்று உழைக்கும் மக்களின் முன்னுள்ள அடிப்படையான அரசியல் போராட்டமாக இருக்கின்றது. ஆட்சியை மாற்றுவதோ, அரசியல் அமைப்பு சட்டத்தை மாற்றுவதோ அல்ல. இதற்கு எதிராக சுரண்டலற்ற ஜனநாயக ஆட்சியை நிறுவும் போராட்டத்தையும், அதற்கான அரசியல் அமைப்புச் சட்டத்தை முன்னிறுத்தி, உழைக்கும் மக்களை அணிதிரட்டுவதே, ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிரான இன்றைய பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் செயற்தந்திரமாகும்.

# போராட்டம்

41/32, கெந்தஹேனவத்தை, தெபானம, பன்னிபபிட்டிய.
தொலைபேசி/தெலைநகல்: 094-113185692
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com


## உண்மையான மாற்றம்ஸ

தற்போது நாட்டில் பரவலாக பேசப்படும் விடயம், போதைப்பொருள் பாவனை ஒழிப்பு, நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இரத்துசெய்தல் இவ் இரண்டு விடயங்களையும் மையப்படுத்தியதான பொது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான விவகாரமாகும். இதனுடாக ஆட்சி மாற்றம், அதிகார மாற்றம் பற்றிய பேச்சுகளும் முன்னணிவகிக்கிறது. இதன் அடிப்படையில் சிலர் பொது வேட்பாளரை தேடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த செயற்பாடுகள் முலமாக பிரச்சினைகளின் உண்மையான் முகம் மறைக்கப்பட்டு மக்களின் கவனம் திசை திருப்பப்படுகிறது.

பிரச்சினைகளின் உண்மையான முகம் கடந்த முப்பது வருடகாலமாக நடை முறையில் பின்பற்றப்பட்டு வரும் நவலிபரல்வாத முதலாளித்துவ ஆட்சி முறைமை என்பதை விளங்கிக் கொள்ள முடியாத நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். பிரச்சினைகளை புரிந்துகொள்ளகூட அவர்களுக்கு நேரமில்லை. பிள்ளைகளின் கல்விக்காக, அன்றாட அத்தியாவசிய தேவைகளுக்காக, பட்டகடனனை மீள செலுத்துவதற்காக அல்லது அதற்கான வட்டியை செலுத்துவதற்காக ஓடி ஓடி உழைக்கவேண்டியுள்ளது. சுருங்ககூறின் இன்று மக்கள் வாழ்வது வாழக்கையல்ல் அது வெறும் இருப்பு மட்டுமேயாகும். இந்த இறுக்கத்தில் இருந்து விடுதலைபெற மாற்றம் தேடும் மக்களுக்கு ஆட்சி மாற்றம், அதிகார மாற்றம் போன்ற வளிகளை அதிகாரவர்க்கம் சிபார்சு செய்து மக்கள் மத்தியில் திணிக்க முயற்சிக்கிறது . இவை உழைக்கும் மக்களை கவருவதற்கான பொறிகளே இன்றி வேறில்லை.

தற்போது மக்கள் மாறற்த்தை எதிர்பாரின்றனர். மாற்றம் என்பது சிந்தனையில் சமூகத்தில் என அனைத்து வகையிலும் ஏற்படவேண்டும். இதைவிடுத்து இருப்பவருக்குப் பதிலாக வேறெருவரை நியமிப்பதல்ல மாற்றம். மஹிந்தரிடம் எமாந்தது போல் பொதுவேட்பாளர் பொறியில் சிக்கிக் மீண்டும் ஒருதடவை ஏமாறுவது மாற்றமல்ல.

இன்றைய நெருக்கடிகளில் இருந்து விடுதலைபெற்றுத்தர மீட்பர் வருவார் என எதிர்பார்த்திருப்பதில் அர்த்தமில்லை. மீட்பும், விடுதலையும் தமது கையில்தான் உள்ளது என்ற யதார்த்தம் மக்களால் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். எனவே நவலிபரல்வாத முதலாளித்துவ மக்கள்விரோத அரசியல் முறைமைக்குப் பதிலாக புதிய மக்கள்சார்பு அரசியல் முறைமை ஓன்றுக்காக தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள், கைத்தொழிலாளர், மாணவர்கள், பெண்கள் என சமூகத்தின் அனைத்து பிரிவினரும் ஓரணி திரண்டு நிறுவனமயமாகி செயற்பட முன்வரவேண்டும். இதுவே உண்மையான மாற்றத்துக்கான பாதையாகும்.

# யாழ் பல்கலைக்கழகத்தை மூடி துக்கத்தை அனுசரிக்கும் அரசாங்கம்

மக்களின் உண்மையான அஞ்சலி என்பது, தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைத் தெரிந்து கொண்டு, அதன் பொது அரசியல் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுப்பதாகும். இல்லாதவரை அஞ்சலி என்பது போலியானதாகவும், மக்கள் விரோதிகளுக்கானதாகவும் குறுகி விடும்.

கொல்லப்பட்ட மக்களுக்கான ஒரு நினைவுதினத்தை தடுத்து நிறுத்தும் அரசு, மக்கள் விரோதிகள் கொண்டாடும் வண்ணம் விடுமுறை தினமாக்குகின்றது. பல ஆயிரம் மக்களை கொன்று, பல ஆயிரம் பேரை காணாமல் ஆக்கிய தேசத்தில், இதைப்பற்றிய ஒரு சுதந்திரமான விசாரணையோ நீதியோ வழங்கியதே கிடையாது. யுத்தம் தோன்றக் காரணமாக இருந்த அரசின் இனவாதத்தை, அரசு கைவிட்டதும் கிடையாது.

மக்கள் தங்களுக்கு எதிரான அனைத்து குற்றவாளிகளையும் இனம் கண்டு கொள்வதன் மூலம், உண்மையான மக்கள் சார்ந்த அஞ்சலிக்கு இன்று இடமில்லாமல் போகின்றது. துரோகமும், மக்கள் விரோதமும் கொண்ட, மக்கள் விரோதிகளுக்கான அஞ்சலியாக நினைவுகள் குறுகி விடுகின்றது.

இதனால் மூச்சுத்திணறும் மனித அவலமோ, வெந்து வெம்பி அழுகி நாற்றமெடுத்து வருகின்றது. அன்னிய நாட்டு நலன்களே, இதில் புழுக்கள் போல் ஊர்ந்து வளர்ந்து வருகின்றது. மீண்டும் மக்களை கொன்று குவிக்கும் அதே அரசியல், இதற்கு ஊக்கியாக மாறி ஊக்கம் பெற்று வருகின்றது.




FRANCH




LONDON




SWIS







41/32, கெந்தஹேன வத்தை, தெபானம, பண்னிபிட்டிய் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.